திருக்கோயில்

மார்ச்சு
2001

விலை
ரூபாய் ஐந்து

மயிலை அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயிலில் பேரறிஞர் அண்ணா நினைவுநாள் சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து விழா மிகச் சிறப்புற நடைபெற்றது. இவ்விழாவில் மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். சென்னை இணை ஆணையாளர் திருமிகு இரா. சுப்பிரமணியன், பி.ஏ., பி.எல்., உதவி ஆணையாளர் திருமிகு ஆ. சுப்பிரமணியம், எம்.ஏ., பிஎல்., திருக்கோயில் உதவி ஆணையாளர்—செயல் அலுவலர் திருமிகு ஆ. குப்புசாமி, பி.ஏ., பிஎல்., ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

திருக்கோயில்

திங்கள் இதழ்

தனி இதழ்	:	ரூ. 5.00
ஆண்டு உறுப்பினர் கட்டணம்	:	ரூ. 60.00
ஆயுள் உறுப்பினர் கட்டணம்	:	ரூ. 500.00

மாலை	திருவள்ளுவர் ஆண்டு 2032	விக்ரம ஆண்டு பங்குனி	மணி
43		மார்ச்சு 2001	3

சிறப்பாசிரியர்

திருமிகு ச. சாவர்க்கர், இ.ஆ.ப.
ஆணையாளர்

ஆசிரியர்

முனைவர் த. அமிர்தலிங்கம்,
எம்.ஏ., பி.எச்.டி.

''திருக்கோயில்'' நிர்வாகக் குழுவினர்

திரு எஸ். கனகய்யா, பி.எஸ்.சி., பிஎல்.
கூடுதல் ஆணையாளர்

திரு ப. தனபால், எம்.ஏ., பி.எல்.
இணை ஆணையாளர், தலைமை இடம்

திருமதி மா. கவிதா, பி.எல்.
ஆணையாளரின் நேர்முக உதவியாளர்

திரு தி. ஜெயராமன், பி.ஏ., பி.எல்.
இணை ஆணையாளர் - செயல் அலுவலர்
அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி
திருக்கோயில், பழநி.

முகப்பு

பங்குனி உத்திரத்தில்
அருள்மிகு ரங்கநாயகித் தாயாருடன்
அருள்மிகு அரங்கநாதர்
எழுந்தருளும் திருக்காட்சி

பொருளடக்கம்

ஆத்ம சமர்ப்பணம் - ச. சாவர்க்கர் இ.ஆ.ப.
ஆணையாளர்,
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
சென்னை - 600 034.

தென்னரங்கத்து இன்னமுதன் - ப. தனபால் எம்.ஏ. பி.எல்.,
இணை ஆணையாளர், தலைமையிடம்

சங்கடங்கள் போக்கும் சக்கரத்தாழ்வார் - கி. ஸ்ரீதரன், எம்.ஏ.,

மாமழையாய்ப் பொழிந்த மாணிக்கவாசகர்
- ஏ.ந. அன்புச்சோழன், பி.காம். பி.எல்.,

அருள்மழை பொழியும் அறுமுகச் செவ்வேள்
- ஸ்ரீலஸ்ரீகருமாரிதாசர்

குருவே துணை - முனைவர் இரா. கலாவதி

பிரபஞ்சன் கூத்தாடும் சிதம்பரத்தான்
- கவிஞர் சொ.பொ. சொக்கலிங்கம்

தட்சிணாமூர்த்தி திருவருட்பா விரிவுரை
- பருத்தியூர் டாக்டர் கே. சந்தானராமன்

குளை அருள்மிகு அங்காள பரமேஸ்வரி மற்றும்
காசி விசுவநாத சுவாமி திருக்கோயில் தலவரலாறு

ஆலய வழிபாடு - திருமேனி நாகராசன்

கலைமகள் திருவருள் - ஜி. கமலா எம்.ஏ.,

பாலுக்குள் நெய்யாய் இருக்கும் பரம்பொருள்
- பி. தங்கநாதன்

வாசகர் எண்ணங்கள்

உறுப்பினர் கட்டணம் அனுப்ப வேண்டிய முகவரி :
உயர்திரு ஆணையாளர் அவர்கள்

திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை
119, உத்தமர் காந்தி சாலை, சென்னை - 600 034.

தொலைபேசி : *8279407*

ஆத்ம சமர்ப்பணம்

- ச. சாவர்க்கர், இ.ஆ.ப.,
ஆணையர், இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை - 600 034.



எனக்கு உகந்ததை மட்டுமே தந்திடுவார்
என்னால் கேட்கப்படுவதைத் தந்திட மாட்டார்
கேட்பது முக்தி என்றால் தந்திடுவார்
கேளாமல் கிடைப்பது கிடைக்கும் என்றிடுவார்.

இன்பமே எனக்கு உகந்தது என்றேன்
இன்பத்திற்கு இனியதையே செய்திடு என்றார்.
தீது வராமல் தடுத்திடக் கேட்டேன்
தீயன செய்வதைத் தவிர்த்திடச் சொன்னார்.

நல்வினைக்குப் பலன் எதுவென்று கேட்டேன்
நல்லதொரு சொர்க்கமே கிடைக்கும் என்றார்
தீவினைக்குப் பலன் என்னவென்று கேட்டேன்
தீயான நரகமே கிடைக்கும் என்றார்.

சொர்க்கத்திற்குப் பிறகு என்னவென்று கேட்டேன்
சோகத்தைத் தந்திடும் பிறவியே என்றார்
நரகத்திற்குப் பிறகு எதுவென்று கேட்டேன்
நஞ்சினும் கொடிய பிறவிதான் என்றார்.

பிறவி வேண்டவே வேண்டாம் என்றேன்
துறவிக்கும் மறுபிறவி இருக்கலாம் என்றார்
ஆசையைப் போக்கினால் போதுமா என்றேன்
ஆத்ம சமர்ப்பணமே ஒரே வழி என்றார்.



தென்னரங்கத்து இன்னமுதன்

– ப. தனபால், எம்.ஏ. பிஎல்.
இணை ஆணையாளர், தலைமையிடம்

ஆழ்வார்கள் மங்களாசாசனம் செய்துள்ள திவ்விய தேசங்கள் 108 ஆகும். பண்டைய நாளில் அதைக் கீழ்க்காணுமாறு வகைப்படுத்தியுள்ளனர்.

சோழ நாட்டில்	40
பாண்டி நாட்டில்	18
மலை நாட்டில்	13
நடுநாட்டில்	2
தொண்டைநாட்டில	22
வடநாட்டில்	12
திருநாட்டில்	1

என 108 திவ்விய தேசங்கள் உள்ளன.

இவற்றில் ''கோயில்'' என்றாலே வைணவர்கள் கொண்டாடும் ''பெரிய கோயில்'' சோழநாட்டுத் திவ்விய தேசங்களில் முதன்மையானதாகத் திகழும் திருவரங்கம் கோயில் தான் என்பது குறிப்பிடத்தக்கது.

பிரம்மா திருமாலைக் குறித்து கடுந்தவம் புரிந்தபொழுது, திருப்பாற்கடலின் நடுவிலிருந்து, கோடிக்கணக்கான கதிரொளியுடன் தெய்வீகம் பொருந்திய ஸ்ரீரங்கவிமானம் வெளிப்பட்டது. அந்த ரங்க விமானத்தைத் தாங்கி வந்தவர் கருடாழ்வார்.

ஸ்ரீ வைகுண்டத்தில் உள்ள யாவரும், ஸ்ரீரங்க விமானத்திலும் இருக்கக் கண்டார் பிரம்மா. தும்புருவும், நாரதரும் வீணாகானம் இசைத்தனர். இந்திரனும், சித்தர் கணங்களும், துதிகீதங்கள் பாடினர். ஆதிசேடன் தன் பெரிய படத்தை விரித்துக் குடை பிடித்து வந்தான். சந்திரனும், சூரியனும் வெண்சாமரங்களை வீசி வந்தனர். விஷ்வக்சேனர் கையில் பிரம்பொன்றை ஏந்தித் திருமால் அடியார்களை வரிசைப்படுத்திக் கொண்டு வந்தார்.

அப்பொழுது கட்டியக்காரரான சுனந்த முனிவர், பிரம்மா முன்வந்து ''ஓங்கார வடிவமான விமானத்துடன், ஸ்ரீரங்க நாதர் பாற்கடலிலிருந்து, தாமாகவே தோன்றி வெளிப்பட்டது நாமெல்லாம் கடைத்தேற மட்டும் அன்று; பூலோகத்திலுள்ள பக்தர்கள் யாவும் கடைத்தேறும் பொருட்டு ஆகும். இந்த தாமாகவே வெளிப்பட்ட (ஸ்வயம்வ்யக்த) பெருமானை வழிபடும் யாவருக்கும் மோட்சமே கிட்டும். ஆதலால் ஸ்ரீரங்கநாதனை, ஸ்ரீரங்க விமானத்தோடு வழிபட்டு வா'' என்று பிரம்மாவிற்கு அறிவுறுத்தினார் சுனந்தர்.

பிரம்மாவும் பலகாலம் தம்முடைய சத்திய லோகத்தில் வைத்து ஸ்ரீரங்கநாதனை வழிபட்டு வந்தார். பிரம்மதேவனின் கட்டளைப்படி சூரியனும், சூரிய குமாரனான வைவஸ்தமனுவும், ஸ்ரீரங்கநாதனை வழிபட்டுவரும்போது சூரியனின் பேரனும், வைவஸ்த மனுவின் மகனுமான இட்சுவாகு தான் இருந்து அரசாளும் அயோத்திமாநகருக்கு ஸ்ரீரங்கநாதனைத் தந்துதவ வேண்டும் என்று பிரம்மாவை நோக்கிக் கடுந்தவம் புரிந்தான். அப்பொழுது ஸ்ரீரங்க நாதரும் ''காவேரி நதிக் கரையிலுள்ள சந்திரபுஷ்கரிணிக்கு அருகிலே வெகுகாலம் இருக்க வேண்டுமென நான் உத்தேசித்திருக்கும்படியால் பிரம்ம தேவனே! என்னை இட்சுவாகுக்குக் கொடுத்துவிடு. இதனால் உனக்கு எந்தக் குறையும் வராது'' என்று அறிவுறுத்தியருளினார்.

பிரம்மதேவனும் ஸ்ரீரங்கநாதரின் அறிவுரைப் படியே கருடாழ்வார் மீது ஸ்ரீரங்க விமானத்தை ஏற்றி வைத்துத் தானும் அம்சவாகனத்தில் அமர்ந்து பூலோகத்தில் இட்சுவாகு மன்னன் தவம் செய்து கொண்டிருந்த வசிட்ட முனிவரின் ஆசிரமத்திற்கு எழுந்தருளினார்.

''இட்சுவாகு! உன் தவத்தை நான்மட்டுமல்ல, ஸ்ரீரங்கநாதனும் மெச்சி இப்பூவுலகிற்கு எழுந்தருளியிருக்கிறார். இனி அரங்கனும், அரங்க விமானமும் இட்சுவாகு தனம் எனவே சிறப்பிக்கப்படும். அரங்கனை வலம் வந்து வணங்கி, வழிபாடு செய்'' என்று பிரம்மா இட்சுவாகுக்கு அறிவுறுத்தித் தம்முடைய சத்தியலோகம் சென்று விட்டார்.

இட்சுவாகு மன்னன் சரயு நதிக்கரையில் அரங்கனுக்கெனத் தனிக்கோயில் அமைத்து, ஸ்ரீரங்க விமானத்தோடு ஸ்ரீரங்கநாதனைப் பிரதிட்டை செய்து வசிட்டர் முதலான முனிசிரேட்டர்களைக் கொண்டு



பூசை செய்வித்து வீடுபேறு பெற்றுய்ந்தான். அவனது வம்சாவழியினரும் இட்சுவாகுவைப் போன்றே பய பக்தியுடனும், ஆசார அனுட்டானங்களுடனும் ஸ்ரீரங்க நாதனை வழிவழி வழிபட்டு வந்தனர்.

இட்சுவாகு மன்னனின் சூரிய குலத்தில் தோன்றிய தசரத சக்கரவர்த்தியும் அரங்கநாதனை அனுதினமும் வழிபட்டு வந்தார். தம் குலம் சிறக்கப் பிள்ளைச் செல்வம் இல்லையே என்ற குறை தசரதரை வெகுவாக வாட்டியது. பிள்ளைப் பேறு பெறுவதற்கெனவே அசுவமேத யாகத்தை தசரதர் நிகழ்த்தினார்.

தசரதரின் அழைப்பை ஏற்று அசுவமேத யாகம் காணச் சென்றவர் தாம் காவிரிக்கரை ஆண்டிருந்த சோழ மன்னரான தர்மவர்மா ஆவார். வேள்வியைக் காணச் சென்றவர் வேதநாயகனான ஸ்ரீரங்க நாதனையும், ஸ்ரீரங்க விமானத்தையும் அயோத்தியில் கண்டு நெஞ்சகம் நைந்து உருகி வழிபட்டார்.

ஸ்ரீரங்கநாதரைக் கண்டநாள் முதலாக அவர் மேல் அளவிறந்த காதல் கொண்டு விட்ட தர்மவர்மா, அரங்கரைக் காவிரிக் கரைக்கு கொண்டுவர தவமே சிறந்த வழி எனக் கண்டு கொண்டு, தம்நாட்டிற்குத் திரும்பவந்து சந்திர புஷ்கரணிக் குளக்கரையில் ஸ்ரீமந் நாராயணரைக் குறித்துக் கடுந்தவம் புரியலுற்றார்.

தவமுனிவர்கள் பலரும் தர்மவர்மாவின் தவத்தைக் கொண்டாடி இட்சுவாகு குலதனமான ஸ்ரீரங்கப் பெருமான் எப்படியும் காவேரி தீரத்திற்குக் கட்டாயம் வருவார். பூவுலகம் உய்ய காவேரி தீரத்தில் பள்ளி கொள்வோம்'' என நாராயணரே முன்னம் முனி சிரேட்டர்களிடம் உறுதி கூறியுள்ள படியால் நீர் இனி தவத்தைக் கைவிட்டுக் காத்திருக்கலாம்.'' என அறிவுறுத்தினார்கள். அரங்கன் தெற்கில் எழுந்தருளும் நன்னாள் கட்டாயம் வருமென்ற நம்பிக்கையுடன் காத்து இருந்தான் தர்மவர்மன்.

இவ்வாறான காலத்தில்தான் இராமபிரான் இலங்கைக்கு அரசனான இராவணனைக் கொன்று அறத்தை நிலைநிறுத்தியபோது, தனக்குப் பேருபகாரம் புரிந்த வீடணனுக்கு இட்சுவாகு குலதனமான ஸ்ரீரங்க விமானத்தை ஸ்ரீரங்கனோடு பரிசாக வழங்கி மகிழ்ந்தார்.

ஸ்ரீராமபிரானிடமிருந்து ஸ்ரீரங்கரை ஸ்ரீரங்க விமானத்தோடு பெற்றுக் கொண்ட வீடணன், இலங்கைக்குச் செல்லும் வழியில், காவேரி தீரம் வந்தது; சற்றே இளைப்பாற விரும்பிய வீடணன் சந்திர புஷ்கரணியை அடுத்திருந்த அனந்த பீடத்தில் ரங்க விமானத்தை இறக்கிவைத்துப் புஷ்கரணியில் நீராடி நித்திய கடன்களை முடித்து, நம்பெருமானான ரங்க நாதருக்கு உச்சிகால பூஜைகளைச் செய்தான். அரங்க

நாதன் காவேரிகரையில் சந்திரபுஷ்கரிணியில் எழுந்தருளி இருப்பதைக் கண்ட முனிவர்களும் பக்தர்களும், தர்மவர்மாவும் ஓடோடி வந்தனர். தன் எண்ணம் ஈடேறப்போவதாக எண்ணி தர்மவர்மாவும் மனம் குளிர்ந்தான்.

இளைப்பாறி, நம்பெருமாளை வழிபட்டு முடித்த வீடணன் இலங்கை புறப்பட எண்ணி ரங்க விமானத்தை எடுக்க முற்பட்டான். என்ன ஆச்சரியம், அவனால் ரங்க விமானத்தை அசைக்கக் கூட முடியவில்லை! ''கங்கையைவிட காவிரி சிறப்புடையது. காவிரி தீரத்தில் குடியிருக்க விரும்பியே இங்கே நான் எழுந்தருளி விட்டேன். அன்பனே! உன்னுடன் எழுந்தருளவில்லையே என நீ வருந்தாதே! நீ இருக்கும் தெற்கு திசை நோக்கியே என் திருவருள் நோக்கம் இருக்கும். உனக்கு என் வைகுந்தவாசமும் கிட்டும். ஆகவே இலங்கைக்கு நீ புறப்படு'' என்று வீடணனுக்கு அறிவுறுத்தியருளினார் அரங்கத்தில் அமர்ந்த அரங்கநாதப் பெருமான்.

கங்கையில் சிறந்தது காவிரி என்று எம் பெருமான் கூறியதையும், தென் திசை நோக்கி அவருடைய திருவருள் நோக்கம் இருக்கும் எனத் திருவருள் புரிந்ததையும் கொண்டே தொண்டரடிப் பொடி ஆழ்வாரும் கீழ்வரும் பாசுரங்களைப் பாடியிருக்கக் காணலாம்.

''கங்கையிற் புனித மாய
காவிரி நடுவு பாட்டு
பொங்குநீர் பரந்து பாயும்
பூம்பொழில் அரங்கம் தன்னுள்
எங்கள்மால் இறைவன் ஈசன்
கிடந்ததோர் கிடக்கை கண்டும்
எங்ஙனம் மறந்து வாழ்கேன்
ஏழையேன் ஏழை யேனே''

''குடதிசை முடியை வைத்து
குணதிசை பாதம் நீட்டி
வடதிசை பின்பு காட்டித்
தென்திசை இலங்கை நோக்கிக்
கடல்நிறக் கடவுள் எந்தை
அரவணைத் துயிலுமாக் கண்டு
உடல்எனக்கு உருகு மாலோ
என்செய்வேன் உலகத் தீரே''

தர்மவர்மன் தன் தவம் பலித்ததென மகிழ்ந்து அரங்கநாதனுக்கு முதன்முதல் பெரிய திருமதில்களுடனும், கோபுரங்கள், விமானங்களுடனும் அரங்கநாதனுக்குத் திருக்கோயில் கட்டுவித்துப் புகழ் கொண்டான்.

அரங்கன் எழுந்தருளியிருக்கும் காரணத்தாலேயே இந்நகரும் திருவரங்கம் எனப் பெயர் கொண்டு விளங்குகின்றது. திருவரங்க நகரத்தின் நட்ட நடுவில் ஓங்கார வடிவமான விமானத்தில் படமெடுத்த ஆதிசேடனாகப் படுக்கையில் சயனத் திருக்கோலத்தில் எழுந்தருளியிருக்கின்றார் அரங்கநாதப் பெருமான். தம் வலக்கையைத் திருமுடியில் படும்படி வைத்துக் கொண்டு, தம் இடக்கையைத் திருவடிப் புறமாக வைத்தவாறு அறிதுயில் கொண்டுள்ள அரங்கன் தானே உலகப் பெரியவன் என்பதையும், தன் திருவடி நிழலைத் தஞ்சமெனக் கொள்வதே மெய்நெறியாகும் என்பதையும் உணர்த்திக்கொண்டிருக்கின்றான்.

பள்ளிகொண்டு விளங்கும் அரங்கநாதருக்குக் கிழாக உற்சவமூர்த்தி திருமகள், பூமகளோடு திருவருள் புரிகின்றார். விமானத்தின் மீது பரவாசுதேவரின் திருமேனியைக் காணலாம். விமானம் முழுவதும் தங்கத் தகட்டால் மூடப்பட்டு நம் கண்களையும் கருத்தையும் கவர்கின்றது.

அரங்கனின் அழகில் ஈடுபட்டு ஆழ்வார்களும் ஆசாரியர்களும் பற்பல பாசுரங்களைப் பாடிப் போற்றியுள்ளனர்.

அரங்கனார் மேல் தீராக் காதல் கொண்டு அரங்கனையே ஆராதித்து அரங்கனுடன் ஐக்கியமாகும் பேறுபெற்ற ஆண்டாள் நாச்சியார்

''எழிலுடைய அம்மனைமீர்! என்அரங்கத்
தின்னமுதர்
குழலழகர் வாயழகர் கண்ணழகர் கொப்பூழில்
எழுகமலப் பூவழகர் எம்மானார் என்னுடைய
கழல்வளையைத் தாமும் கழல்வளையே
ஆக்கினரே''

எனப்பாடி அரங்கர்தம் எழிலுருவில் தம்மைப் பறிகொடுத்துப் பரிதவிப்பதைக் காணுகின்றோம்.

குலசேகராழ்வார் அவ்வாறே திருவரங்க நாதனைக் கண்ணிணைகள் கண்ணாரக் காண, வாயாரவாழ்த்திப் பூதலத்தில் உருண்டு புரள வேண்டுமென்று துடிதுடிக்கின்றார்.

"வன்பெரு வானகம் உய்ய, அமரர் உய்ய,
மண்ணுய்ய
மண்ணுலகில் மனிசர் உய்ய
துன்பமிகு துயர் அகல, அயர்வொன்றில்லாச்
சுகம்வளர
அகம்மகிழும் தொண்டர் வாழ
அன்பொடு தென்திசை நோக்கிப் பள்ளி கொள்ளும்
அணிஅரங்கன் திருமுற்றத்து அடியார் தங்கள்
இன்பமிகு பெருங்குழுவு கண்டு
யானும் இசைந்து உடனே என்று கொலோ
இருக்கும் நாளே''

என்பது அவர்தம் பெருமாள் திருமொழிப்பாசுரம்.

திருவரங்கனின் திருமதில் பணியே தாம்பெற்ற பேறாக உவந்த திருமங்கையாழ்வார்

"ஏனம் மீன்ஆமையோடு அரியும் சிறு குறளுமாய்
தானும் ஆய தரணித் தலைவன் இடம்என்பரால்
வானும் மண்ணும் நிறைய புகுந்தீண்டி வணங்கும் நல்
தேனும் பாலுங் கலந்தன்னவர் சேர் தென்னரங்கமே''

என்று வானோரும் மண்ணோரும் வணங்கும் பூவுலக வைகுந்தம் தென்னரங்கம் என்று போற்றுகின்றார்.

அணி அரங்கனைக் கண்ட கண்கள், வேறொன்றினைக் காணாது என்பது திருப்பாணாழ்வார் திருவாக்கு.

"கொண்டல் வண்ணனைக் கோவலனாய்
வெண்ணெய்
உண்ட வாயன் என்னுள்ளம் கவர்ந்தானை
அண்டர் கோன் அணிஅரங்கன் என் அமுதினைக்
கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே''

எனப் பாடி அரங்கனுடன் ஐக்கியமாகும் பேறு பெற்றார் திருப்பாணாழ்வார்.

இவ்வாறு ஆழ்வார்கள் அனைவரும் 247 பாசுரங்களால் திருவரங்கத்தைப் போற்றிப் பாடியுள்ளனர். மதுரகவியாழ்வார் நீங்கலான பதினோரு ஆழ்வார்களும், அதிக அளவு பாசுரங்களால் பாடியிருப்பதால் ''ஆழ்வார்கள் உகந்த எம்பெருமான்'' எனச் சிறப்பினைப் பெற்று விளங்குகிறார் திருவரங்கப் பெருமான்.

ஏழுலகிற்கும் அரங்கநாதனே காவலன் என்பதைத் திருக்கோயிலின் ஏழுமதில் சுற்றுக்கள் உணர்த்துகின்றன. மாடங்கள் ஆழ்ந்துள்ள சுற்று பூலோகத்தையும், திரிவிக்ரம சோழன் சுற்று புவர்லோகத்தையும், கிளிச்சோழன் சுற்று சுவர்லோகத்தையும், திருமங்கை மன்னன் சுற்று மஹாலோகத்தையும், குலசேகரன் சுற்று ஜனலோகத்தையும், இராஜமஹேந்திர சோழன் சுற்று தவலோகத்தையும், கர்ப்பகிரகம் உள்ள தர்மவர்மன் சுற்று சத்திய லோகத்தையும் உணர்த்துவதாகும். இந்த ஏழு சுற்றுக்களையும் வளைத்

திருக்கும் நெடுஞ்சுற்றினை அடைய வளைந்தான் என்றும் வழங்கி வருகிறார்கள்.

இவ்வாறு ஏழுலகும் கொண்டாடும் திருவரங்கம் திருக்கோயிலை அவ்வப்போது பலர் செப்பனிட்டுத் திருப்பணிகளைப் புரிந்திருக்கிறார்கள். முதன்முதல் இத்திருக்கோயிலைக் கட்டிய பெருமை சோழமன்னன் தர்மவர்மனுக்கு உரியது என்பதை முன்னரே கண்டோம். பின்பு ஒரு காலத்தில் மணல் மூடி மண்ணுக்குள் மறைந்திருந்த திருக்கோயிலை ஒரு கிளியின் வாயிலாக உணர்ந்து விமானம் முதலாகத் திருவீதிகள் உட்பட பிரகாரங்கள் அனைத்தையும் செப்பனிட்டுப் புகழ் கொண்டவன் கிளிச் சோழன் என வரலாறு கூறுகின்றது. தர்மவர்மா, கிளிச்சோழன் ஆகிய இவ்விருவரின் காலத்தை உணரமுடியவில்லை. கி.பி. 10 ஆம் நூற்றாண்டு முதலாக தமிழகத்தை ஆண்ட சோழமன்னர்களுக்கு இத்திருக்கோயில் வளர்ச்சியில் பெரும்பங்கு உண்டு. கி.பி. 13ஆம் நூற்றாண்டில் சடாவர்ம சுந்தர பாண்டியனும், ஒய்சாள மன்னன் இராமதேவனும் இத்திருக்கோயிலுக்குப் பல திருப்பணிகள் புரிந்துள்ளனர். கி.பி. 14ஆம் நூற்றாண்டு முதலாக நாயக்க மன்னர்கள் பலர் - அவர்களிலும் 17ஆம் நூற்றாண்டில் சொக்கநாத நாயக்கர், 18ஆம் நூற்றாண்டில் விஜயரங்க சொக்கநாத நாயக்கர் பல அரிய திருப்பணிகள் செய்திருப்பதைக் கல்வெட்டுகள் வாயிலாக அறிகிறோம்.

திருவரங்கம் இவ்வாறு காலங்கள் தோறும் வளர்ந்து சிறந்து விளங்கும் தன்மையால்தான் கோயிலே ''பெரிய கோயில்'' எனப் பெயர் பெற்று விளங்குகின்றது. பெருமானும் ''பெரிய பெருமாள்'' ஆக அழைக்கப்படுகிறார். தாயாரும் ''பெரிய பிராட்டியார்'' என அழைக்கப்படுகிறார். ஊருக்குப் ''பேரரங்கம்'' எனப் பெயர் விளங்குகின்றது. இங்குப் படைக்கப்படும் தளிகை ''பெரிய அவசரம்'' எனவும் பட்சணங்கள் ''பெரிய திருப்பணியாரங்கள்'' எனவும், பெருமை பெறுகிறது. இங்கு இசைக்கப்படும் வாத்தியமும் ''பெரிய மேளம்'' எனப் பெருமை பெறுகிறது. ''பெரிய திருவடி'' என பெயர்பெறும் கருடாழ்வாரும் இத்திருத்தலத்தில்தான் மிகப்பெரிய கருடாழ்வாராகத் திகழ்கின்றார். ஆசியாவிலேயே உயர்ந்த 235 அடி இராஜகோபுரமும் இத்திருத்தலத்தில்தான் திகழ்ந்து வருகின்றது.

பகவத் இராமானுஜர் நியமித்த கட்டளை மாறாமல் ஆண்டுமுழுவதும் உற்சவம் கொண்டாடப் படும் சிறப்பினை இத்திருத்தலத்தில் நாம் காணலாம்.

சித்திரைமாதத்தில் 10 நாட்கள் தொடர்ந்து நடக்கும் விருப்பண உடையாரால் நடத்தி வைக்கப்பட்ட விருப்பணன் உற்சவம் நடைபெறுகின்றது. வைகாசி மாதத்தில் ஒன்பது நாட்கள் வசந்தோற்சவம் நடைபெறுகின்றது. ஆனிமாதத்தில் திருமஞ்சனோற்சவம். பெருமானது ஏகாந்தத்திருமஞ்சனம், தரிசிப்பது மிகமிக விசேடம். யானைமீது தங்கக்குடத்தில் காவேரி தீர்த்தம் வரும் காட்சி கண்கொள்ளாக் காட்சி. ஆடிமாதத்தில் பதினெட்டாம் பெருக்கு, இருபத்தெட்டாம் பெருக்குகளில் பெருக்கெடுத்தோடும் காவிரியைக் காணப்பெருமாள் காவேரிக்கு எழுந்தருளுகின்றார். அம்மாமண்டபம் எனப்படும் தென் திருக்காவேரிப் படித்துறை மண்டபத்திற்குப் பெருமாள் எழுந்தருளி காவிரி தாய்க்குச் சீர் வழங்குதல் இவ்வாடிப்பெருக்கு விழாவின் சிறப்பாகும்.

ஆவணிமாதத்தில் கிருஷ்ணஜெயந்தி விழாவில் உறியடி வைபவம் கண்டு மகிழலாம். இதே மாதத்தில் ஒன்பது நாட்கள் நடைபெறும் பவித்ரோத்ஸவத்தில் அரங்கநாதரின் பவித்ர மாலைகளைக் களைந்து சந்திர புஷ்கரிணிக் கரையில் எழுந்தருளியுள்ள கோதண்டராமருக்குச் சாற்றும் விசேடத்தைக் கண்டு மகிழலாம்.

புரட்டாசி மாதத்தில் ஸ்ரீரங்கநாயகித் தாயாருக்கு நவராத்திரி விழா நடைபெறும், ஐப்பசிமாதத்தில் துலாமாதம் ஆனதால் ஒவ்வொரு நாளும் பெருமாளுக்குத் தங்கக்குடத்தில் திருமஞ்சனத் தீர்த்தத்தை யானைமேல் கொண்டுவரும் திருக்காட்சியைக் கண்டு இன்புறலாம். இதே மாதத்தில் ஒன்பது நாட்கள் நடைபெறும் ஊஞ்சல் திருவிழாவில் அரையர்களின் தாலாட்டுப் பாடல்கள் கேட்டு இன்புறலாம், தீபாவளிப் பண்டிகையில் பெருமாளும் எண்ணைக் காப்பு கொண்டு திருமஞ்சனம் கொள்கிறார்.

கார்த்திகை மாதத்தில் பெருமாள், சக்கரத்தாழ்வார் சந்நிதிக்கு எழுந்தருளி சொக்கப்பனை கண்டருளுகின்றார். இம்மாதம் கைசிக ஏகாதசி புறப்பாடு விசேடமானது. பெருமாள் மேற்புறம் உள்ள யாளிப் படிக்கட்டிற்கு எழுந்தருளும் படியேற்றம் மகத்தானது. விஜயரங்கநாயக்கர் தாமதமாக வந்து இப் படிஏற்றம் காண முடியாமல் போனதால் ஓராண்டு இங்கேயே தங்கியிருந்து மறு ஆண்டில் படிஏற்றம் கண்டது குறிப்பிடத்தக்கது. படியேற்றத்தின் போது பச்சைக் கற்பூரங்களைப் பெருமாள் மீது தூவுவது பக்தர்கள் காண வேண்டிய பரவசக்காட்சி.

மார்கழியில் பகற்பத்து, இராப்பத்து வைபவம் திருவரங்கத்தில் மிக மிக விசேடமாகக் கொண்டாடப்படுவது உலகறிந்த ஒன்று. இத்திருவாய்மொழித்



திருநாள் விழா தமிழ் மறைகளான திவ்விய பிரபந்தம் நாளும் முழங்கும் ஒப்பற்ற விழா என்பது நாம் உணரத்தக்கது. பகல்பத்து உற்சவத் தின் போது அரையர் சேவையில் திவ்வியப்பிரபந்தப் பாசுரங்களையும், பல வரலாற்றுக் கதைகளையும் கண்டு களிக்கலாம். வைகுண்ட ஏகாதசியன்று பரமபத வாசல் திறக்கப் படுவது பார் கொண்டாடும் ஒப்பற்ற விழாவாகும். அன்று முதலே இராப்பத்து விழா தொடங்குகின்றது.

தைமாதத்தில் சங்கராந்தி விசேஷ உற்சவம் நடைபெறுகிறது. மாசி மாதத்தில் தெப்போற்சவம் ஒன்பது நாள் நடைபெறுகின்றது. பங்குனியில் பிரம மோற்சவம் நடைபெறுகிறது. பங்குனி உத்திரம் ஸ்ரீரங்கநாயகித் தாயாரின் திருநட்சத்திரம். அன்று பெரிய பெருமாளும், ரங்கநாயகித் தாயாரும் ஒரு சேர எழுந்தருளிச் சேவை சாதிப்பது மிக விசேட மான திருவிழாவாகக் கொண்டாடப்படுகின்றது. திருவரங்கத்தில் மக்கள் அனைவரும் அன்று வடை பாயாசத்துடன் விருந்து உண்பது கோலாகலமான கொண்டாட்டமாகும்.

பெரிய பெருமாளும், பெரிய பிராட்டியும் ஒன்றாக எழுந்தருளி சேவை சாதிக்கும் பங்குனி உத்திரவிழா தரிசனக் காட்சியே இத் ''திருக்கோயில்'' இதழின் முகப்பு அட்டையாக வெளியிடப் பெற் றிருப்பதை மெய்யன்பர்கள் கண்டு மகிழலாம். இவ் வாறு பெரிய பெருமாளான திருவரங்கநாதனுக்கு வருடத்தில் பன்னிரண்டு மாதங்களிலும் உற்சவங் கள் மிகச் சிறப்பாக நடைபெற்று வருவதை இன்றும் பக்தர்கள் கண்குளிர, மனங்குளிரச் சேவிக்கலாம்.

வரும் 15.3.2001 அன்று மெய்யன்பர்கள் கண்குளிர, மனம் குளிரக் காணவேண்டிய மகா சம்ப் ரோட்சண விழா நடைபெறுகின்றது. அருள்மிகு அரங்கநாதர் சன்னதி, அருள்மிகு ரங்கநாயகித் தாயார் சன்னதி, அருள்மிகு சக்கரத்தாழ்வார் சன்னதி ஆகிய வற்றுடன் நாற்பதுக்கும் மேற்பட்ட உப சன்னதிகள், 24 கோபுரங்கள் ஆகிய அனைத்திற்கும் சுமார் 3 கோடி ரூபாய்கள் செலவில் திருப்பணிகள் நிறைவேற்றப் பட்டு 15.3.2001 வியாழக்கிழமை அன்று காலை 10.00 மணிக்கு மேல் 11.00 மணிக்குள் மஹா சம்பரோட்சண வைபவம் நடைபெறுவது மெய்யன்பர்கள் அனை வரும் காண வேண்டிய ஒப்பற்ற திருவிழாவாகும்.

"பொலிக பொலிக பொலிக
போயிற்று வல்லுயிர்ச் சாபம்
நலியும் நரகமும் நைந்த
நமனுக்கு இங்கு யாதொன்றும் இல்லை
கலியும் கெடும் கண்டுகொண்மின்
கடல்வண்ணன் பூதங்கள் மண்மேல்
மலியப் புகுந்து இசைபாடி
ஆடி உழிதரக் கண்டோம்''

என்று நம்மாழ்வார் பாடியுள்ளவாறு நித்திய சூரிகள் யாவருமே வந்து கண்டு இன்புற்று, ஞாலம் வாழ வாழ்த்தும் ஒப்பற்ற திருவிழா அவர்களின் மகா சம்ரோட்சண திருவிழாவாகும்.

இவ்வொப்பற்ற வைபவத்தைக் கண்டு மகிழ நாம் புண்ணியம் செய்திருக்கின்றோம். அனைவரும் வருக! அரங்கன் திருவருள் பெறுக!!

★★★

சங்கடங்கள் போக்கும் சக்கரத்தாழ்வார்

- கி. ஸ்ரீதரன், எம்.ஏ.
பதிவு அலுவலர், தொல்பொருள் ஆய்வுத்துறை, திருச்சி - 620 020.

ஸ்ரீரங்கம் கோயிலில் சக்தி வாய்ந்த சக்கரத் தாழ்வார் தனி சன்னதியில் கோயில் கொண்டு விளங்கு கிறார். சனிக் கிழமைகளில் மக்கள் திரளாக இங்கு வந்து வழிபடுகின்றனர். சக்கரத்தாழ்வார் சன்னதிக்கு திருப் பணிகள் செய்யப்பட்டு மகாசம்ப்ரோக்ஷணம் செய்யப் படுகிறது. சக்கரத்தாழ்வாரின் சிறப்புகளை காண் போமா?

திருமாலுக்கு ஐந்து ஆயுதங்களை சிறப் பாகக் கூறுவார்கள். இவர்களை 'நித்யசூரிகள்' என அழைப்பர். இவர்களில் சக்கரப்படையாக இருந்து சேவை செய்பவர் 'சுதர்சனம்' என அழைக்கப்பட்டு கிறார். திருமாலை விட்டு அகலாத நிலையில் திருமாலுடன் ஒன்றி இருந்து தொண்டு செய்கிறார்.

திருவாழி ஆழ்வான், திகிரி, ஷேதிராஜன், சுதர்சன், சக்கரத்தண்ணல் என்று பல பெயர்களால் அழைக்கப்படுகிறார். சுதர்சன் என்ற பெயருக்கு 'நல் வழி காட்டுபவர்' என்பது பொருள். மேலும் ஞான மளிப்பவர், ஆரோக்கியமளிப்பவர், செல்வம் தருப வர், விரோதிகளை அழிப்பவர் எனப் போற்றப்படு கின்றார். சங்கு, சக்கரம் தாங்கிய திருக்கோலத்துடன் காட்சி தரும் திருமாலை,

''திருகண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும்
அருக்கன்அணி நிறமும் கண்டேன் - செருக்கிளரும்
பொன்னாழி கண்டேன் புரிசங்குகைக் கண்டேன்
என்னாழி வண்ணன் பாலின்று''

என்று பேயாழ்வார் போற்றுகின்றார்.

சக்கரத்தாழ்வாரின் உருவ அமைப்பினை சிற்ப நூல்கள் எடுத்துக் கூறுகின்றன. எட்டு அல்லது பதினாறு கரங்களுடன் நெருப்பு சுவாலை போன்ற முடி அமைப்புடன், முகத்தில் கடைவாய்ப் பற்களுடன் மூன்று கண்களுடன் காட்சி தருகிறார். அறுகோண அமைப்பில் எழுந்தருளி அருள் புரிகின்றார். பின் புறத்தில் யோக நரசிம்மரின் வடிவினைக் காண்கி றோம். சிவபெருமானால் நிர்மாணிக்கப்பட்ட சக்தி வாய்ந்த சக்கரம் ருத்ர சக்தியைத் தன்னுள்ளே அடக்கிக் கொண்டுள்ளது. மகா சுதர்சனத்தை வழிபடுபவர் கள் மகேசுவரனான சிவனையும், திருமாலையும் வழிபட்ட புண்ணியத்தைப் பெறுகின்றனர். சுதர்சன சதகம், சுதர்சன மாலா மந்திரம், சுதர்சன காயத்ரி போன்றவை சக்ரத்தாழ்வார் வழிபாட்டில் முக்கிய இடம் பெறுகின்றன.

சக்கரத்தாழ்வார் தமிழகத்தில் பல கோயில் களில் சிறப்பாக வழிபடப் பெறுகின்றார். மாமல்ல புரத்தில் மகிஷாசுரமர்த்தினி குகையில் உள்ள சிறபங் களில் திருமாலை வணங்கும் கோலத்தில் மனித வடிவிலே காட்சி தருகிறார். கும்பகோணத்தில் சக்கரத்தாழ்வார்க்கென்று தனிக் கோயில் உள்ளது. சக்கரபாணி கோயில் என அழைக்கப்படுகிறது. திருமோகூர், காஞ்சிபுரம், திருவெள்ளறை போன்ற கோயில்களில் சக்கரத்தாழ்வார் சிறப்பாக வழிபடப் பெறுகிறார். வைணவக்கோயில்களுக்கு நிலம் தான மாக அளக்கும் பொழுது சக்கரம் பொறித்து எல்லைக் கல் நடுவார்கள். இதனை 'ஆழிக்கல்' என அழைப்பர்.

திருவரங்கம் கோயில்

திருவரங்கம் கோயிலில் கோயில் கொண்டு விளங்கும் சக்கரத்தாழ்வார் மூலவர் 16 கரங்களுடன் காட்சி தருகிறார். மூலவரைச் சுற்றி 108 அட்சரங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. மூலவர் சக்கரத்தாழ்வாரின் பின்புறம் யோக நரசிம்மரின் வடிவம் காணப்படு கிறது. நாம் வழிபடும் உற்சவருக்கு எட்டு கரங்கள் உள்ளன. கிழக்கு நோக்கிய சன்னதியில் வாயிலில் இடது தூணில் ஆஞ்சனேயரை வழிபடுகிறோம். சன்னதி திருச்சுற்றின் தென் மேற்கு மூலையில் இராமானுஜரை தெய்வமாகக் கருதி இராமானுஜ நூற் றந்தாதியைப் பாடிய திருவரங்கத்தமுதனார் சேவை சாதிக்கிறார். ஆழியின் அம்சமாக அவதாரம் செய்த வர் திருமழிசை ஆழ்வார் எனக் கூறுவர்.

வரலாற்றுச் சிறப்பு

சக்கரத்தாழ்வார் சன்னதியில் பல கல்வெட்டு கள் காணப்படுகின்றன. ஜடாவர்மன் வீரபாண்டி யன் கல்வெட்டில் 'திருவாழி ஆழ்வார்' என அழைக்கப் படுகின்றார். இங்கு குலசேகரன் சந்தி என்ற வழிபாடு



நடத்த தானமளிக்கப்பட்டதை அறிய முடிகிறது. மேலும் விஜய நகர மன்னன் விருபாட்சன் காலத்தில் கோயில் விமானம், கோபுரம், மண்டபம் ஆகியவை கட்டப்பட்டன. பாச்சில் கிராமத்தில் நிலம் வழங்கப்பட்டது. திருவாழி ஆழ்வார்க்கு அமுது படைப்பதற்காக ஸ்ரீரங்க நாராயண ஜீயர் தானமளித்ததாக இரு கல்வெட்டுகள் அளிக்கும் செய்தியால் அறிய முடிகிறது. 'கோயில் ஒழுகு' என்ற நூலிலும் சக்கரத்தாழ்வார் சன்னதி பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

திருவரங்கத்தில் காவிரி ஆற்றில் பெருமாளுக்கு திருப்பள்ளிஓட உற்சவம் முன்பு நடைபெற்றது. காவிரி வெள்ளத்தால் ஓடம் ஆற்றோடு செல்லத் தொடங்கியது. பக்தர்கள் கலங்கினர். அப்பொழுது கூர நாராயண ஜீயர், சுதர்சன சதகத்தால் சக்கரத் தாழ்வாரைத் துதிக்க திருப்பள்ளி ஓடம் கரைக்கு வந்து சேர்ந்தது என்று கூறப்படுகிறது.

உலகில் உள்ள எந்த தீயசக்தியையும் எதிர்த்து அழிக்க வல்லது 'மகா சுதர்சனம்' என்று சுதர்சன மூல மந்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. நல்லவர்களுக்கு எதிராகச் செயல்படும் மந்திரம், தந்திரம் போன்றவற்றை அழித்து அவர்களைத் துயரங்களிலிருந்து காக்க வல்லது சுதர்சன சக்கரம் எனப் போற்றப்படுகின்றது. இத்தகைய சிறப்பு வாய்ந்த சக்கரத்தாழ்வார் சன்னதியில் நடைபெறும் சம்ப்ரோக்ஷண விழாவில் பங்கு கொண்டு சக்கரத் தாழ்வாரை வழிபட்டு நலமடைவோமாக!

★★★

மாமழையாய்ப் பொழிந்த மாணிக்கவாசகர்

- ஏ.ந. அன்புச்சோழன், பி.காம்., பி.எல்
இணைச்செயலாளர், சட்டத்துறை, தலைமைச்செயலகம், சென்னை - 600 009.

'நால்வர் நான்மணிமாலை'' எனும் நற்பெரும் நூலில் சிவப்பிரகாச சுவாமிகள். 'மாணிக்க வாசகன் எனும் ஒரு மாமழை'' என்ற மாணிக்கத் தொடரைப் பயன்படுத்தி இருக்கின்றார் என்பது நாமெல்லாம் அறிந்த ஒரு நற்செய்தி.

கடல்நீரை முகந்து மேகம் மழைபொழியும் உலக இயற்கையை உவமையாக்கி, மாணிக்கவாசகர் எனும் மேகம், கங்கைநதியைத் தலையில் சூடிக்கொண்டிருக்கும் கருணைக் கடலாகிய சிவபெருமானிடம் நீரை முகந்து கொண்டு, மாமழை பொழியும் மேகமாகிப் பொழிந்தது எனவும் விளக்குகின்றார் சிவப்பிரகாச சுவாமிகள்.

மாணிக்கவாசகம் எனும் மாமேகம் பொழிந்த மழைநீரே திருவாசகம் ஆகும். அத்திருவாசகமாகிய மழைநீர் கற்பவர் மனமாகிய ஒண்குளம் புகுந்து நிறைந்தது. அவர்தம் நாவெனும் மதகுவழி நடந்தது. கேட்பவர் செவியாகிய மடையிற் செவ்வனே பாய்ந்தது. கேட்பவர் உளமாகிய வயலில் புகுந்து, அங்கு விதைக்கப்பட்டிருந்த அன்பாகிய வித்தினை சிவமாக முளைவிடச் செய்தது; அச்சிவப்பயிர் வளர்ந்து, கருணைமலர் மலர்ந்து, முத்தியாகிய மெய்ப்பயனை விளைவித்தது என்று சிவப்பிரகாசசுவாமிகள், மாணிக்க வாசகர் எனும் மாமழை விளைவித்த முத்திப்பயனை தெய்வத்தமிழில் விளக்கமுறப் பாடியிருக்கும் 'நால்வர் நான்மணிமாலை''ப் பாடலை இங்குநாம் பயின்று இன்புறலாம்.

'வலமழு உயரிய நலமலி கங்கை
நதிதலை சேர்ந்த நற்கரு ணைக்கடல்
முகந்துல குவப்ப உகந்த மாணிக்க
வாசகன் எனும்ஒரு மாமழை பொழிந்த
திருவாசகம் எனும் பெருநீர் ஒழுகி
ஓதுவார் மனமெனும் ஒண்குளம் புகுந்து
நாவெனும் மதகில் நடந்து கேட்போர்
செவிஎனும் மடையிற் செவ்விதிற் செல்லா
உளமெனும் நிலம்புக ஊன்றிய அன்பாம்
வித்திற் சிவமெனும் மென்முளை தோன்றி
வளர்ந்து கருணை மலர்ந்து
விளங்குறு முத்தி மெய்ப்பயன் தருமே''

மழையின்றி இவ்வுலகம் இல்லை என்பது எவ்வாறு உண்மையோ, அவ்வாறே மாணிக்கவாசகராம் மாமழை இன்றி இம்மண்ணுலகமும் இல்லை என்பது தெளிவு.

திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார்'' என்பது முதுமொழி. ஆகவேதான் சிவப்பிரகாச சுவாமிகள், வேதங்கள் முக்கட்சிவனாரின் திருவாயால் வெளிப்பட்ட வாயினும், மாணிக்கவாசகனார் திருவாயால் வெளிப்பட்ட திருவாசகம்போல் மெய்யன்பர்களை உருக்குவன அல்ல எனக் கூறி, திருவாசகமே வேதத்தினும் விழுமிய தமிழ்வேதம் என்பதைத் தெளிவுபடுத்துகின்றார். அவ்வொப்பற்ற பாடல் பின்வருமாறு:

''விளங்கிழை பகிர்ந்த மெய்யுடை முக்கட்
காரணன் உரைஎனும் ஆரண மொழியோ
ஆதிசீர் பரவும் வாதவூர் அண்ணல்
மலர்வாய்ப் பிறந்த வாசகத் தேனோ
யாதோ சிறந்தது என்குவீர் ஆயின்
வேதம் ஓதின் விழிநீர் பெருக்கி
நெஞ்சுநெக் குருகி நிற்பவர்க் காண்கிலேம்
திருவாச கம்இங்கு ஒருகால் ஓதின்
கருங்கல் மனமும் கரைந்துகக் கண்கள்
தொடுமணற் கேணியிற் சுரந்துநீர் பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்தி
அன்பர் ஆகுநர் அன்றி
மன்பதை உலகின் மற்றையர் இலரே''

யாவரும் பயின்று பயன்பெறும் தன்மையால் தமிழ்வேதமாகிய திருவாசகத்தைப் பொற்கலம் எனவும், அத்தமிழ் வேதத்தைக் கற்பார் பெறும் பயன் வீடுபேறு எனவும் விதந்து ஓதும் சிவப்பிரகாச சுவாமிகள் அவ்வகையிலும் இறைவனார் வாய்மொழி பிறந்த வேதத்தை விடவும், மாணிக்கவாசகர் வாய்மொழியாகிய திருவாசகம் ஏற்றம் மிக்கதே என்பதை

''திருவார் பெருந்துறைச் செழுமலர் குருந்தின்
நிழல்வாய் உண்ட நிகரில் ஆனந்தத்
தேன்தேக் கெறியுஞ் செய்ய மாணிக்க
வாசகன் புகன்ற மதுர வாசகம்

யாவரும் ஓதும் இயற்கைத்து ஆதலின்
பொற்கலம் நிகர்க்கும்; பூசுரர் நான்மறை
மட்கலம் நிகர்க்கும்; மதுர வாசகம்
ஓதின் முத்தி உறுபயன்
வேதம் ஓதின் மெய்ப்பயன் அறமே''

என்ற பாடலில் விளக்கியிருத்தல் காணலாம்.

மேலும் திருவாசகத்தை அருளியுள்ள மாணிக்க வாசகப் பெருமான் அருட்பெருமையை விளக்கவரும் சிவப்பிரகாச சுவாமிகள், மாணிக்க வாசகர் திருமாலினும் மேலவர், செயற்கருஞ் செயல்கள் புரிந்த நாயன்மாரினும் மேலவர் என்பதை விளக்க முற எடுத்து உரைக்கின்ற அருமையான பாடலும் ''நால்வர் நான்மணிமாலை''யில் திகழ்கின்றது.

திருமால் சக்கரம் பெறச் சிவனாருக்குத் தம் ஒரு விழிமலரையே தாமரை மலர் போல் பறித்துப் படைக்க நேர்ந்தது. நாயன்மார்களும் அவ்வாறே இறைவர்தம் திருவருளைப் பெறப் பற்பல செயற்கரும் செயல்களைப் புரிய நேர்ந்தது.

கணம்புல்லநாயனார் தம் முடியை விளக்காக எரித்த பின்னரே சிவபெருமான் திருவருள் புரிந்தார்; இயற்பகை நாயனார் தம் எழில்மிகு துணைவியை அர்ப்பணித்த பிறகே சிவபெருமான் திருவருள் புரிந்தார்; மானக்கஞ்சாற நாயனார் தம் அருமைமகளின் சடையை அரிந்து அர்ப்பணித்தபிறகே சிவபெருமானின் திருவருளைப் பெற முடிந்தது. இளையான்குடி மாற நாயனார் விதைத்த நெல்லை மறுபடியும் வாரிவந்து அமுதுபடைத்த அருஞ்செயலுக்குப் பிறகே இறைவனார் அன்பைப் பெற முடிந்தது. அமர்நீதி நாயனார் இறைவனாரின் ஒரு கோவணத்திற்காகத் தாமும் துலை ஏறியதோடு, தம் மக்கள் மற்றும் மனைவியையும் துலை ஏற்ற வேண்டியிருந்தது. அதிபத்த நாயனார் அருமையிற் கிடைத்த பொன் மணி மீனையும் பொன்னார் மேனியனுக்கு அர்ப்பணிக்க வேண்டியிருந்தது.

அரிவாட்டாயனார் தம் ஊட்டியை அரிவாளால் அரிந்துகொண்ட பிறகே சிவபெருமானின் திருவருள் பெறமுடிந்தது. அவ்வாறே திருக்குறிப்புத் தொண்டரும் துணி துவைக்கும் கல்லில் தம் தலையை துவைத்துக் கொண்டபிறகே இறைவனாரின் அருள்பெற முடிந்தது.

கலிகம்பநாயனார் தம் மனைவியின் கையை வெட்டியபிறகே அவர் கலி தீர்த்து அருள்புரிந்தார்



சிவபெருமான். சண்டேசுவரர் சிவத்தந்தையின் அருள் பெறத் தம் தந்தையின் காலை வெட்ட நேர்ந்தது. சிறுத்தொண்டர் சீராளனை அரிந்து அமுது படைத்த பிறகே சிவனார் திருவருள் அமுது புரிந்தார். தம் சுற்றம் எல்லாம் வெட்டிச் சாய்த்த பிறகே கோட்புலி நாயனாரும், தம்மனைவியின் மூக்கினை அரிந்த பிறகே செருத்துணை நாயனாரும், தம் இளமனைவி தரும் இன்பசுகத்தைத் துறந்தபிறகே திருநீலகண்ட நாயனாரும் இறைவனின் திருவருள் பெற முடிந்தது.

இவ்வாறெல்லாம், திருமாலும், நாயன்மார்கள் பலரும் செயற்கரிய செயல்கள் புரிந்தபிறகே திருவருள் புரிந்த சிவபெருமான், மாணிக்க வாசகர் தம்மைப் பாடவேண்டும் என்ற விருப்பத்தால் மாணிக்கவாசகரின் பொருட்டு மதுரை மாநகருக்குக் குதிரை வியாபாரியாக வந்து அல்லலுற்றார். வேதங்கள் காண முடியாத தம் திருமுடி மீது மண்ணைச் சுமந்து அல்லலுற்றார். நீறுபூசிய தம் திருமேனியில் பிரம்பினைக் கொண்டு அரிமர்த்தன பாண்டியன் அடிக்க, அப்பிரம்படியையும் அவர் விருப்பமுற ஏற்றுக்கொண்டார். பொறுத்தற்கரிய துன்பங்களைப் பொறுத்துக் கொண்டு, இவ்வாறு இறைவன் அல்லற்பட்டதெல்லாம் எதற்காக? என்றால் மாணிக்க வாசகப் பெருமான் தம்மைப் பாடவேண்டும் என்ற பேரவாவின் பொருட்டுத்தான்.

அப்படியானால் மாணிக்க வாசகப் பெருமானின் பெருமை தான் என்னே! என்னே! அவர்தம் திருவாசகமாம் தமிழ் மாமறையின் பெருமைதான் என்னே! என்னே! சிவப்பிரகாச சுவாமிகள் நால்வர்

நான் மணி மாலையில் இத்தகைய மாணிக்க வாசகர் தம் பெருமையை விளக்கமுறப்பாடும், அருமை யான பாடல் இதனை நாமும் உள்ளத்தில் பதித்து பயன்பெறுவோமாக!

''கடல்நிற வண்ணன் கண்ணொன்று இடந்து
மறைச்சிலம் பரற்று மலரடிக்கு அணியப்
பரிதிகொடுத்த சுருதி நாயகற்கு
முடிவிளக் கெரித்தும், கடிமலர்க் கோதைச்
சுரிகுழல் கருங்கண் துணைவியை அளித்தும்
அருமகள் நறும்பூங் கருமயிர் உதவியும்
நெல்முளை வாரி இன்னமுது அருந்தியும்
கோவண நேர்தனை நிறுத்துக் கொடுத்தும்
அகப்படும் அணிமீன் அரற்கென விடுத்தும்
பூட்டி அரிவாள் ஊட்டி அரிந்தும்
தலையுடை ஒலிக்கும் சிலையிடை மோதியும்
மெய்ம்மலர் கோதை கைம்மலர் துணித்தும்
தந்தையைத் தடிந்தும் மைந்தனைக் கொன்றும்
குற்றம் செய்த சுற்றங் களைந்தும்
பூக்கொளும் மாதர் மூக்கினை அரிந்தும்
இளமுலை மாதர் வளமை துறந்தும்
பண்டைநாள் ஒருசிலர் தொண்டர் ஆயினர்
செங்கண்மால் தடக்கையிற் சங்கம் நாண
முட்தாள் தாமரை முறுக்குஅவிழ் மலர்மேல்
வலம்புரி கிடக்கும் வாதவூர் அன்ப!
பாடும் பணிநீ கூடும் பொருட்டு
மதுரைமா நகரில் குதிரை மாறியும்
விண்புகழ் முடிமிசை மண்பொறை சுமந்தும்,
நீற்றெழில் மேனியில் மாற்றடி பட்டும்
நின்னைத் தொண்டன் என்னக் கொண்டனன்
இருக்கும் அடுக்கல் அரக்கன் எடுப்ப
முலை பொர வரைபொரு மொய்ம்பின்
மலைமகள் தழுவ மனமகிழ் வோனே''

திருவாசகத்தின் பெருமையை இப்பாருல கிற்கு உணர்த்தவேண்டி தில்லைத் திருச்சிற்றம்பலக் கூத்தப் பெருமானார் மாணிக்கவாசகரிடம் நான் மறை அந்தணனாய் எழுந்தருளி வந்து மாணிக்கவாச கர் சொல்லச் சொல்ல திருவாசகத்தில் உள்ள 656 பாக்களையும் தாமே தம் கைப்பட ஏட்டினில் எழுதிக் கொண்டார். ''பாவை பாடிய வாயால் ஒரு கோவை பாடுக'' எனப் பணிந்து, மாணிக்க வாசகர் பாடப்பாட ''காமம் சான்ற ஞானப் பனுவல்'' ஆகிய ''திருச்சிற் றம்பலக் கோவை'' நூலையும் இறைவர் தம் கைப் பட ஏட்டினில் எழுதிக் கொண்டார். ''இவை திரு வாதவூரான் பாட அழகிய திருச்சிற்றம்பலமுடை யான் எழுதியவை'' எனக் குறிப்பெழுதி அவ்வேடு களைப் பாரோர் பயன்பெற பொன்னம்பலத் திரு வாயிற்படியில் வைத்தருளிச் சென்றார் என்றால் மாணிக்கவாசகர் பெருமையை என்னென்று இயம்பு வது?

இறைவன் நம் எண்ணங்களுக்கு எட்டாத வன். அவன் திருவடிகள் ''எண்ணுதற்கு எட்டா எழி லார் கழல்கள்'' அத்தகைய கழல்களை நாம் எட்டுவ தற்கு நமக்கு அருள் புரிபவையே திருவாசகத் திருப்பாடல்கள், ஆகவேதான் எட்டுக் குணங்கள் கொண்ட இறைவனை, நாம் எண்ணுதற்கு எட்டாத் திருக்கழல்கள் கொண்ட இறைவனை, எட்டுதற்கு அருள்புரியும் மாணிக்கவாசகர்தம் அருட்பாடல் களை ''எட்டாம் திருமுறை''யாக வைத்து ஏற்ற முறப் போற்றி வருகின்றது சைவசமயம்.

இத்தகைய திருவாசகத்தின் பெருமையை உணர்ந்தே அதில் தோய்ந்து அனுதினமும் திளைத்து மகிழ்ந்திருந்த அருட்பிரகாச வள்ளலார் ''ஆளுடைய அடிகள் அருள்மாலை''யில் திருவாசகத்தைப் பயிலப் பயில ஊன்உருகும், உயிர் உருகும், திருவாசகப் பாடல்கள் உவட்டாமல் இனிக்கும் எனப் போற்றி உரைக்கின்றார்.

"வான்கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித் தீஞ்
சுவைகலந்தென்
ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல்
இனிப்பதுவே.''

திருவாசகத்தை ஓதும் போது அதனைக் கேட் டுருகும் மானிடருக்கு மட்டுமன்றிப் பறவைகள், விலங்குகள் காதிலும் திருவாசகப் பாடல்கள் விழு மானால் அவையும் பிறவி நீங்கி ''வானோர்க்கு உயர்ந்த உலகம் புகும்'' என அருட்பிரகாச வள்ளலார் பாடியிருப்பது கொண்டு திருவாசகத்தின் பெருமையை நாம் நன்கு உணர முடியும்.

"வாட்டமிலா மாணிக்க வாசகநின் வாசகத்தைக்
கேட்டபொழுது அங்கிருந்த கீழ்ப்பறவைச்
சாதிகளும்
வேட்டமுறும் பொல்லா விலங்குகளும்
மெய்ஞ்ஞான
நாட்டமுறும் என்னில் இங்கு நான் அடைதல்
வியப்பன்றே''

ஜி.யூ. போப் என்ற ஐரோப்பியர், தம்முடைய கிறித்துவ சமயத்தைப் பரப்பத் தமிழகம் வந்து தமிழ்பயின்று திருவாசகத்தைக் கற்க முற்பட்ட பொழுது அதன் முதற்பாடலிலேயே - முதலிரு



தொடர்களிலேயே தம் உள்ளத்தைப் பறிகொடுத்து விட்டார்.

''நமச்சிவாய வாஅழ்க! நாதன்தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான்
தாள் வாழ்க''

என்ற தொடர்களில் பயின்றுவரும் கருத்தின் ஆழத்தில் மனம் ஒன்றித் திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கத் தொடங்கிய ஜி.யூ. போப் தமிழ் மொழியின் காதலர் ஆகவே ஆகிவிட்டார். அவர்தம் கல்லறை யில் ''இங்கே ஒரு தமிழ் மாணவன் உறங்குகின்றான்'' என்று கல்வெட்டுப் பதித்தார் என்றால்

''பாவெனப்படுவது உன் பாட்டே''

என்று சான்றோர்கள் திருவாசகத்தைப் போற்றியிருக் கும் மொழி, பொன்மொழி தானே!

சிவபெருமானே மானிட வேடத்தில் வந்து திருஏட்டில் பொறித்த திருவாசகத்தின் பெருமையைப் போற்றுதற்கு இனி ஏதும் வார்த்தைகள் இருப்பதாகத் தெரியவில்லை. திருவாசகம் பயின்றால் இறைவனை அடையலாம். திருவாசகம் பயின்றால் தொல்லை மிகு பிறவி நீங்கிப் பேரானந்த இன்பம் நல்கும் வீடு பேறு பெற்று உய்யலாம். ஆகவே நித்தமும் திரு வாசகத் தெள்ளமுதைப் பருகி நாம் பேரானந்தப் பெருவாழ்வு பெற்று இன்புறுவோமாக!

மாணிக்கவாசகன் எனும் ஒரு மாமழையைத் துதித்து அவன் பொழிந்த திருவாசகத்தில் மூழ்கி 656 அருட்பாடல்களையும் முற்றோதல் செய்தால் மண்ணுலகம் தழைக்க மாமழை பொழியும் என் பது திண்ணம். மெய்யன்பர்களே! திருவாசகத்தை முற்றோதல் செய்யுங்கள். கோடையிலேயும் குளிர் மழை பொழிந்து அருள்வான் வான்கருணைமிக்க வள்ளல் சிவபெருமான். பாடுவோம்! பயன்பெறு வோம்!

வாழ்க மாணிக்கவாசகப் பெருமானின் மாண்பு!

''தொல்லை இரும்பிறவிச் சூழுந் தளைநீக்கி
அல்லலறுத் தானநதம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறிஅளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவா சகமென்னுந் தேன்''

''தானே முத்தி தருகுவன் சிவனவன்
அடியன் வாத வூரனைக்
கடிவின் மனத்தாற் கட்டவல் லார்க்கே.''

திருச்சிற்றம்பலம்

★★★

அருள் மழைபொழியும் அறுமுகச் செவ்வேள்

- பாம்பனார் பைந்தமிழ் அரசு ஸ்ரீலஸ்ரீ கருமாரிதாசர்

(முன் தொடர்ச்சி)

'விகடச் சக்கரம்' என்ற பெயர் விநாயகருக்கு ஏன் வந்தது? முன்னொரு காலத்தில் தக்கன் செய்த வேள்வியை அழிக்க சென்ற வீரபத்திரர் மீது திருமால் சக்கராயுதத்தை ஏவினார். அந்த சக்கரத்தை வீரபத்திரர் அணிந்திருந்த கபாலங்களில் ஒன்று கவ்விக் கொண்டது. அதனை மறுபடியும் பெற்றுக் கொள்வதற்காக திருமாலின் சேனைத் தலைவர் விஷ்வக்ஸேனர், வீரபத்திரர் முன் விகடக் கூத்தாடினார். அந்த திருக் கூத்தைக்கண்டு எல்லோரும் சிரித்தார்கள். வீர பத்திரர் மாலையில் இருந்த வெண்டலைக் கபால மும் சிரித்தது. வாயிலிருந்த சக்கராயுதம் வெளியே விழுந்தது. விழுந்த சக்கரத்தை விஷ்வக்ஸேனர் எடுப் பதற்கு முன், விநாயகப் பெருமான் எடுத்து மறைத்து வைத்துக் கொண்டார். விஷ்வக்ஸேனர், விநாயகப் பெருமான் முன் விகடக் கூத்தாடி, அவரை மகிழ்வித்து சக்கரத்தைப் பெற்றுத் திருமாலிடம் தந்தார். இவ்வளவு மகிமை மிகுந்த இந்தப் பாடலை அன்பு உள்ளத்தால் பக்தி முதிர்ச்சியுடன் பாடினார்.

திகட சக்கரச் செம்முகம் ஐந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சுக்கர இன்மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்.

உரைகூறும்போது,

''திகட சக்கரச் செம்முகம் ஐந்துளான்''

என்பதற்கு

திகழ் + தசக்கரச் செம்முகம் ஐந்துள்ளான் என்று விளக்கி விரிவுரை செய்தார். அவையின்கண் இருந்த ஒரு பெரும் புலவர் கச்சியப்பரைப் பார்த்து, ''சுவாமி களே! திகழ் தசம் என்பது திகடசம் என்று புணர்வ தற்கு தொல்காப்பியம் முதலிய பழம்பெரும் இலக் கண நூல்களுள் விதியில்லையே, இதனை எவ் வாறு பாடினீர்?'' என்று கேட்டார்.

கருணைக்கவி கச்சியப்ப சிவாச்சாரியார், ''புலவர் பெருமானே! தாங்கள் கூறியது சரிதான். ஆனால், இம்முதலடி இறைவன் திருவாக்கு, முருகன் தந்த முதலடி'' என்றார்.

அதுகேட்ட புலவர் பெருமான், புன்னகை செய்து, ''முத்தமிழ்க் கடவுள் முருகன் தந்த முதலடியாய் இருந்தால், அவரே இந்த அவைக்கண் வந்து விளக்கம் கூறட்டும். இல்லாவிடில், நூலை அரங்கேற விட மாட்டேன்'' என்றார்.

கருணைக்கவி கச்சியப்பர், நாளை அரங் கேற்றுவோம் என்று அவையினருக்குக் கூறிச் சென் றார்; சபை கலைந்தது.

கச்சியப்பர், இரவெல்லாம் உணவுண்ணா மல், உள்ளம் துன்புற்று, முருகனை நினைந்து, உருகித்தரையில் கிடந்து துயின்றார். அடியார் பொருட்டு அருள்மழை பொழியும் கந்தவேள் பரமன், கச்சியப்பர் கனவிலே தோன்றி, ''அன்பனே! கவலைப்படாதே! சோழ தேசத்தில், வீரசோழியம் என்று ஒரு அற்புத மான இலக்கண நூல் உள்ளது. அதில் திகழ்தசம் - திகடசம் என்று புணர்தற்கு அந்நூலில் சந்திப்படலத் தில் 18ஆம் செய்யுளில் விதி இருக்கிறது. சோழவள நாட்டுப் புலவன் ஒருவன், அந்நூலை நாளைக்கு இங்கு கொண்டு வந்து விளக்கஞ் செய்வான்,'' என்று திருவாய் மலர்ந்தருளி மறைந்தார்.

மறுநாள் ஆலயத்தில், அவை கூடியது. முருக வேட்பரமன் புலவர் வடிவில் தோன்றி, 'வீரசோழியம்' என்ற இலக்கண நூலை நீட்டினார். சந்திப்படலத்தில் உள்ள 18ஆம் செய்யுளைக் காட்டினார்; சந்தேகத்தை ஓட்டினார். வாது செய்த புலவர் முதல், மற்ற புலவர்களும் அச்சமும், அதிசயமும் அடைந்தார் கள். சோழநாட்டுப் புலவர், வீரசோழியத்தை கச்சியப் பர் கரத்தில் கொடுத்து மறைந்தார். இது முருகன் செய்த திருவிளையாடல் என்றே கருதி, உள்ளம் உருகி, ஆனந்தக் கண்ணீர் பெருகி அழுது, கச்சியப்பருடைய திருவடியில் வீழ்ந்து, தொழுது, புலவர்கள் துதி செய் தார்கள்.

வாது செய்த புலவர், கச்சியப்பரைப் பல முறை பணிந்து, ''முருகன் திருவருள் பெற்ற முனி வரே! தங்களின் மகிமை தெரியாது, அரங்கேற்றத்

தைத் தடுத்து சிறியேன் செய்த பெரும்பிழையை பொறுத்தருள வேண்டும்,'' என்று பலமுறை வேண்டினார்.

கச்சியப்பர், அவரை இருகரங்களாலும் எடுத்து மார்புறத்தழுவி, ''ஐயனே! தாங்கள் தடைசெய்த காரணத்தால் தான், முருகன் திருவருள் இவ்வகைப் பட்டது என்று எல்லோரும் உணர முடிந்தது. இது இறைவன் திருவிளையாடலே ஆகும். இறைவனைக் கண்டு களிக்குமாறு செய்த தங்களின் அற்புதத் தொண்டை எப்படிப் பாராட்டுவேன்? அதற்கு என்ன கைம்மாறு செய்வேன்?'' என்று பாராட்டிப் புகழ்ந்தார்.

சபையிலிருந்த அனைவரும், மகிழ்ச்சிப் பெருக்குடன், புராணத்தை அரங்கேற்றலாம் என்ற வுடன் புராண அரங்கேற்றம் நடை பெற்றது.

தொண்டை வளநாட்டிலுள்ள இருபத்திநான்கு கோட்டத்து வேளாளப் பெருமக்கள், வந்தவர்கள் எல்லோருக்கும் சோறூட்டி, ஆடைகள் வழங்கினார்கள். பல்லாயிரக்கணக்கான அன்பர்கள், புராணத்தைக் கேட்டுப் பரவசம் அடைந்தார்கள். கச்சியப்பர் நாள் தோறும், புராணத்தை வாசித்து, பதவுரை, பொழிப்புரை, கருத்துரை, விளக்கவுரை, நுண்பொருள் ஆகிய வற்றைச் சொல்லி விரிவுரை செய்தார்.

இவ்வளவு மகிமைமிகுந்த கந்தப்புராணத் தின் பெருமையை புலவர்கள் பாராட்டிப் புகழ்ந்தார்கள்.

சொல்லழகும், பொருளழகும் மிகுந்த செய்யுள் நலத்தைப் பாராட்டினார்கள். சீரும், சிறப்பும் மிகுந்த இந்தப் புராணத்தை கற்றோரும், கேட்டோரும், படித்தோரும், நூலைப்பரப்புவோரும், விரிவுரை செய்வோரும் பல்லாண்டு இன்புற்று வாழ்வார்களாக! என்று அருளாளர்கள் வாழ்த்தினார்கள்.

அப்படிப்பட்ட கந்தவேள் புராணத்தை இலக்கியமாக செந்தமிழ் உரை நடையில் எழுதுவதற்கு விநாயகப் பெருமானை வணங்குவோமாக.

''உச்சியின் மகுட மின்னா வொளிர்தர நுதலினோடே
வச்சிர மருப்பி னொற்றை மணிகொள கிம்புரிவயங்க
மெய்ச்செவிக் கவரி தூங்க வேழமா முகங்கொண் டுற்ற
கச்சியின் விகடசக்ர கணபதிக் கன்பு செய்வோம்''

(தொடரும்)

★★★

குருவே துணை

- முனைவர் இரா. கலாவதி

''மாதா பிதா குரு தெய்வம்'' என்பது ஆன்றோர் வாக்கு! தெய்வமே குருவடிவமாக வந்து அடியவரின் அறியாமையை நீக்கும் ஞானக்கல்வியை அளித்ததை நம் ஆன்ம இலக்கியங்கள் விவரிக்கின்றன. குரு என்றால் 'ஒளி' என்று பொருள். நம் அறியாமை இருளைப் போக்கக் கூடிய ஞான ஒளியை ஏற்றி வைப்பவர் என்று பெயர்.

இறைவனே குருவடிவமாய் வந்ததை,

''மறை சொலும் பொருள்
மனித வேடமாய் வந்தது''

என்று பாடுகின்றனர். குருவை இறைவனாகப் பார்க்க வேண்டும். இறைவன் நம்மோடு பேசாத குருவாகும். முருகன், சிவனுக்கு உபதேசம் செய்து 'குரு நாதன்' என்று போற்றப்பட்டான். சிவன், தட்சிணாமூர்த்தி எனத் தோன்றி ஞானோவுபதேசம் செய்தார். கீதாசாரியன் ஆகிக் கண்ணன் பார்த்தனுக்கு உபதேசம் செய்தான். இக்கதைகள் எல்லாம் 'குருவே தெய்வம்' என்பதை உணர்த்துவதற்காக எழுந்தவையாகும்.

குழந்தையின் இளமைப் பருவத்தில் தாயே முதல் குரு ஆகின்றாள். வளர்ந்த பின் தந்தை, உடன் பிறந்தோர், உற்றார், உறவினர் என்று பட்டியல் நீண்டு கொண்டே போகின்றது. ஏட்டுக் கல்வியோடு இவர்கள் கற்றுத்தரும் வாழ்க்கைக் கல்வியும் ஒரு குழந்தையைப்புடம் போடுகின்றது.

'எழுத்தறிவித்தவன் இறைவனாகும்' என்பதற்கேற்ப 'அ'கரம் சொல்லிக் கொடுப்பவரே குரு என்று சொல்லப்படுகின்றார். இக்குருவின் மூலமாகவே கல்வி அறிவு ஒருவருக்கு ஏற்படுகின்றது. இவர் காட்டும் அறிவு ஏட்டுக் கல்வியே ஆகும்.

ஏட்டுச்சுரைக் காய் கறிக்கு உதவாது. ஆன்ம ஈடேற்றத்தை நல்காது. இவர்கள் தரும் ஞானம் 'புரோட்சா ஞானம்' என்று சொல்லப்படும். மறை பொருளான ஞானச் செம்பொருளை விளக்கும் ஞானம் 'அபரோட்ச' ஞானம் எனப்படும் - இஞ் ஞானத்தை வழங்குபவரே ஞானாசிரியர்.

இந்த ஞானாசிரியர்கள் நம் உடலுக்குள் மறைந்திருக்கும் சிறப்பறிவினைத் தொட்டு உணர்த்துகின்றனர். மெய்க் கூற்றின் இரகசியமாகவும், நீறுபூத்த நெருப்பாகவும் மறைந்திருப்பதைப் பேசாமல் பேசி, தொடு உணர்வின் மூலம் இவர்கள் உணர்த்துகின்றனர். இந்த ஞானக் கல்வி தருபவர் 'அவபோதகுரு' என்று சித்தர் ஞானம் கூறுகின்றது.

வெறும் சடங்குகளையும், சம்பிரதாயங்களையும் கற்றுத்தருபவர் 'போதகுரு' ஆவார். இவர்கள் காரியகுருக்கள். ஞானாசிரியராக விளங்குபவர் 'காரணகுரு'வாக விளங்குபவர். மக்கள் இறைவன் மேல் கொண்ட பக்தி, பயம் என்ற உணர்வுகளைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, நீங்கள் இதைச் செய்யாவிட்டால் இறை நிந்தனைக்கு ஆளாவீர்கள். நரகம்தான் உமக்குக் கிட்டும் என்று பலவாறாகக் கூறி மனத்தைக் குழப்பி பணம்பறிப்பது தான் இந்த போத குருக்களின் நோக்கமாகும். இறுதியில் விதியின்மேல் பழி போடுவதே இவர்கள் வேலை. இதை,

''குறியென்ற உலகத்திற் குருக்கள் தானும்
கொடிய மறை வேதமெல்லாங் கூர்ந்து பார்த்தே
அறியாமற் பிரமத்தைப் பாரா மற்றான்
அகந்தை யாய்ப் பெரியோரை அழும்பு பேசி
விரிவான வேடமிட்டுக் காவி பூண்டு
வெறும் பிலுக்காய் அலைந்திடுவான் நாயைப் போலே
பரியாச மாகவுந்தான் தண்டு மேந்திப்
பார்தனிலே குறட்டிடு நடப்பான் பாரே.''

''பாரப்பா சீடர்களை அழைப்பான் பாவி
பணம் பறிக்க வுபதேசம் பகர்வோ மென்பான்
ஆரப்பா பிரமநிலை காட்டாமற்றான்
ஆகாசப் பொய்களையு மவன்தான் சொல்வான்
நேரப்பா சீடனுக்குப் பாவமாச்சு.''

என்றும் வருகின்ற காக புசுண்டரின்பாடல்கள் பணம் பறிக்கும் வேடதாரிகளை இனம் காட்டுகின்றது.

அறிவின் திறம் கொண்டு சோதித்தறிய வேண்டிய குருவின் உண்மையான தன்மையை அறிந்து கொள்ளாது அவன் ஆட்டுவிக்கின்ற

படியெல்லாம் ஆடுகின்ற மக்களின் அறியாமையை - மூடபக்தியைச் சித்தர்கள் சாடுகின்றனர். கண் தெரியாத குருடன் மற்றொரு குருடனுக்கு வழிகாட்ட முடியுமா? என்று வினா தொடுக்கின்றார் திருமூலர். குருடனுக்கு வழிகாட்டுகிறவனும் குருடனாகவே இருந்து விட்டால் விபரீதம் தான் விளையும். இருவரும் சேர்ந்து குழிக்குள் தான் விழுவார்கள்.

''குருட்டினை நீக்கும் குருவினைக் கொள்ளார்
குருட்டினை நீக்காக் குருவினைக் கொள்வர்
குருடும் குருடும் குருட்டாட்ட மாடிக்
குருடும் குருடும் குழிவீழுமாறே''

என எச்சரிக்கிறார் திருமூலர்.

எனவே போலிக் குருக்களை நம்புவதைவிட மனத்தில் இருக்கும் குருவை உணரும்படி ஞானப் பெண்ணை விளித்து,

''குரு இருப்பதும் நெஞ்சக்குள்ளே - மனக்
கோணல் அறுப்பதும் தன்னுக்குள்ளே
பொருள் இருப்பதும் அறியாமல் - புடம்
போடுவதெப்படி ஞானப் பெண்ணே''

என வினா தொடுக்கின்றார் சித்தர்.

'மனம் ஒரு குரங்கு.' அது ஒரு நிலையில் இல்லாது இங்கும் அங்கும் தாவக்கூடியது. நேர்வழி செல்லாது குறுக்குவழி பாயும். எனவே அத்தகைய மனத்தின் கோணலை நேர்ப்படுத்தி நல்வழி காட்டும் உட்பொருளாகிய ஒளியை நாம் அறிந்து கொள்ளாவிட்டால் எவ்வித ஆன்மீகப்பயனும் நமக்கு இல்லை. இதை அறிந்து தெளிந்துவிட்டால் நம் அகம் புடம் போட்ட தங்கமாகி விடும்.

தாங்கள் பெரிய ஞானிகள் என்று, பட்டையும், உருத்திராக்க மாலையும் தாங்கி, ஆசிரமம் நடத்தி, தாங்கள் இறைவனின் கலியுக அவதாரமாக பிறப்பெடுத்து வந்துள்ளோம் என்று கூறிக் கொண்டு, தமக்குத்தாமே அர்ச்சனை செய்து கொண்டு திரியும் பொய் வேடதாரிகளால் எந்தப்பயனும் இல்லை. பொய் வேடத்தைக் கலைத்து விடுவதே நாட்டுக்கு நல்லது. அதுவே புண்ணியம் என்று கூறுகிறார் திருமூலர். இத்தகையவர்களை இனம்கண்டு களையவேண்டியது அரசின் கடமை. சமுதாயத்தின் நலத்திற்கு கேடு விளைவிக்கும் இவர்கள் களை போன்றவர்கள்.

வள்ளுவர்,

''கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர்''

என்று அரசனின் கடமையைக் கூறுகின்றார். நாட்டுக்குக் கேடு விளைவிப்பவருக்குத் தண்டனை கொடுக்க வேண்டும் அது பயிரின் வளர்ச்சிக்குத் தடையாக இருக்கும் களையைக் களைவது போலாகும் என்று கூறுகிறார். இதையே,

''வேநெறி நில்லார் வேடம்பூண் டென்பயன்
வேடநெறி நிற்போர் வேடம்நல் வேடமே
வேடநெறி நில்லார் தம்மை விறல் வேந்தன்
வேடநெறி செய்தால் வீடு அதுவாமே''

என்று திருமந்திரமும் கூறுகின்றது.

இருபத்தோராம் நூற்றாண்டின் அறிவியல் யுகத்தில் இருக்கும் நம்மிடையே இத்தகைய 'போலி குருக்கள்' நடமாடிக் கொண்டு தான் இருக்கிறார்கள். அவர்கள் விரித்திருக்கும் மாய வலையில் கண்ணைத் திறந்து கொண்டே மக்கள் மாட்டிக் கொள்வதைக் கண் கூடாகக் காணும் பொழுது மனம் வேதனையுறுகின்றது. 'பட்டால்தான் தெரியும்' என்பர். எத்தனையோ போலிகளின் உண்மை உருவத்தைச் சட்டம் தோலுரித்துக் காட்டியும் 'பக்தி' என்னும் சங்கிலியில் தாமே போட்டுக் கொள்கின்றனர் மக்கள். இனியாவது விழிப்படையட்டும்! ஒருவிதத்தில் பொருளாசையே இதற்கெல்லாம் அடிப்படையாக இருக்கின்றது. உழைப்பில் நம்பிக்கை வைக்காது உன்மத்தர்களை நம்புவதால் வரும் கேடே இதற்குக் காரணம்.

உண்மை என்றும் பகட்டாக இருக்காது; உண்மை என்றும் சுய விளம்பரம் செய்யாது; உண்மை என்றும் தருக்கித் திரியாது; உண்மை என்றும் மனிதனை அடிமைப் படுத்தாது; பொருளில் ஆர்வம் காட்டாது. உண்மை இருக்கும் இடத்தில் அருள் இருக்கும்; அருள் இருக்கும் இடத்தில் பணிவு இருக்கும் பணிவு இருக்கும் இடத்தில் எளிமை இருக்கும். தன் சத்திய ஒளியில் ஆன்மாக்களைக் கரைத்துக் கொள்ளும். தன்னைக் கேளாமலே அவர்கள் நலனில் அக்கறை காட்டும். அந்தச் சத்திய ஒளியில் மானுடம் இரண்டறக் கலக்கட்டும். அதற்குக் 'குருவே துணை' நிற்கட்டும்.''

சற்குருவே போற்றி!

★★★

பிரபஞ்சக் கூத்தாடும் சிதம்பரத்தான்

- கவிஞர் சொ. பொ. சொக்கலிங்கம்

ஐம்பூதம் உருவாக, அண்டங்கள் உருவாகி
ஐம்பூதம் உடலோடு ஐக்கியமாய் உள்ளடங்கி,
ஐம்பொறிகள் உடலினிலே அங்கங்களாய் உருவாகி,
ஐம்புலன்கள் உடலுயிரை ஆட்டுவிக்கும் என்பதாகி,
ஐம்பூதம் சிறிதளவு அதன் வழியில் மாறிவிட்டால்,
அண்டங்கள், உடலுயிரும் அழியுமொரு
நிலையிருந்தும்,
ஐம்முகனார், என்னுள்ளே ஐக்கியமே ஆனதினால்
ஐம்பூதப் பயமொன்றும் அடியோடு எனக்கிலையே.
1

நிலம் என்றும் தாயாக நிறைந்தபல கோடிகோடி,
நின்மடியில் உயிரினங்கள், நீண்டபெரும்
கடல்நதிகள்,
பலகோடி மானுடர்கள், பரந்துவிரிந்த காடுமலைகள்,
பலவிதமாய் முறைத்தெழுந்து பல்கிமடியும்
உன்மடியில்,
உலகமெலாம் உணவளித்து, உயிர்காக்கும் தாயெனினும்,
உன்சத்திய உடல்சிலிர்த்தால், உலகழியும்
நிலையிருந்தும்
உலகாழ்வோன் காஞ்சியிலே உறைவதுபோல் என்னுள்ளம்,
உறைவிடமாய்க் கொண்டதினால், ஓருபயமும்
எனக்கில்லையே. 2

நீர்இன்றிக் கடலுண்டோ? நீண்டபெரும் நதிகளுண்டோ?
நீர்நிறைவில் இருபாகம்; நிலப்பரப்போ ஒருபாகம்;
நீர்கொடுத்து, வளமளித்து, நிலமெல்லாம் உயிர்தழைக்க,
நீண்டகோடி காலமெல்லாம் நிலைத்தஒரு
சத்தியத்தில்,
பார்தழைக்க வந்தஒரு பஞ்சபூதம் என்றாலும்,
பாதைசிறிதே விலகிவிட்டால், பாரழியும்
நிலையிருந்தும்,
நீர்ஊறும் திருவ ானைத் திருக்கோயில் கொண்டவன் என்
நெஞ்சமெலாம் நிறைந்ததினால் நீள்கவலை
எனக்கிலையே. 3

நெருப்பின்றிச் சூடுஉண்டோ? சூடுஇன்றி உயிருண்டோ?
நெருப்பாலே ஆக்கலுண்டு; நெருப்பாலே
அழித்தலுண்டு;
நெருப்பினிலே ஒளிபிறந்து, நிர்ணயிக்கக் காலம்மாறும்,
நெற்றியிலே ஒளிபிறந்தால் நீள்பிறப்பும் முடிவடையும்;
நெருப்பொளியில் உயிர்தழைக்கும்; நெருப்பதனின்
சத்தியத்தில்
நிலைபிரழ உலகழியும் நிலையற்ற நிலையிருந்தும்,
திருவண்ணா மலை ஒளியாம் சிவபெருமான் என்தலைமேல்,
திருநடனம் புரிவதினால் சிறுபயமும்
எனக்கில்லையே. 4

காற்றினிலே சுழன்றாடும் கண்டங்களும், அண்டங்களும்
காற்றடைத்த உடம்பிற்குள் கண்டறிய இயலாமல்,
தோற்றமின்றி உள்மூச்சாய், துவண்டுவரும் வெளிமூச்சாய்,
தொல்லுலகில் மாந்தரினம், தொடர்ந்துவர
உயிர்கொடுக்கும்
காற்றிற்கும் உயிருண்டு; கணித்தஅதன் சத்தியத்தில்,
கடுகளவு மாறிவிட்டால் கண்டமழியும்
நிலையிருந்தும்,
ஏற்றவன்திரு காளஹஸ்தி எழிலாகும் கோயில்கொண்டோன்,
என்னெஞ்சம் நிரம்பியதால் எப்பயமும்
எனக்கிலையே. 5

ஆகாய ரகசியத்தை அடிமுதலாய் அறிந்தார்இலர்;
அறிந்துவிட்டால் ஆண்டவனின் அடிமனத்தை
அறிந்திடுவார்;
ஏகாந்த மனநிலையை எட்டுவது இகவாழ்வின்
இலக்குஎன வாழ்ந்திடுவோர் இயற்கையோடு
ஒன்றிடுவார்;
ஆகாயம் கூரையென அகிலமெலாம் வாழ்ந்தாலும்,
அதன்சத்திய நிலைதவற அழிந்துவிடும்
நிலையிருந்தும்,
சாகாத பிரபஞ்சக் கூத்தாடும் சிதம்பரத்தான்,
தங்கியதால் என்னெஞ்சில் தனிக்கவலை
எனக்கிலையே, 6

தட்சிணா மூர்த்தி திருவருட்பா விரிவுரை

- பருத்தியூர் டாக்டர் கே. சந்தானராமன், M.A., DLitt, PhD.

வழிகாட்டும் வள்ளல்

கண்ணுவ மகரிஷி கங்கையில் நீராடி வரும் கருத்து உடையவராய்த் தமிழ்நாட்டிலிருந்து காசி நகர் நோக்கிக் கால்நடையாய்ச் சென்று கொண்டிருந் தார்.

மயிலாடுதுறையில் காவிரியைத் தாண்டி அதன் வடபாலிருந்த உத்திரமயூரபுரி என்ற பகுதியில் சென்று கொண்டிருந்தார். அப்போது கரிய முகமும் உருவமும் கொண்ட மூன்று பெண்கள் அவரை வழிமறித்தனர். கண்ணுவ மகரிஷி தன் வழியிலிருந்து சற்று விலகி, அப்பெண்களைக் கடந்து செல்ல முற் பட்டார். எவரும் காண விரும்பாத தோற்றமுடைய அப்பெண்கள் முனிவரை எவ்வழியிலும் செல்ல முடியாதபடி தடுத்தனர்.

''முனிவராகிய என்னை நீங்கள் மூவரும் ஏன் வழிமறிக்கின்றீர்கள்?'' என அப்பெண்களிடம் வின வினார்.

''முனிவரே! நீங்கள் எந்தப் பெண்ணை நாடிச் செல்லுகிறீர்களோ, அந்தப் பெண்கள் நாங்கள்தான்'' என்றனர். கண்ணுவர் திடுக்கிட்டார்! ஏனெனில், அவர் எந்தப் பெண்ணையும் நாடிச் செல்ல வில்லையே!

''முனிவரே! திகைக்க வேண்டாம். நீங்கள் புனிதம் பெற்றிட மூழ்கிவரச் செல்லும் மூன்று நதிகளாகிய கங்கையும், யமுனையும், சரஸ்வதியும் நாங்கள்தான்! பல்லாயிரவர் தினந்தோறும் எங்க ளிடத்து மூழ்கிக் கழித்த பாவச் சுமையே எங்களை இந்தக் கோர உருவம் கொள்ளச் செய்துவிட்டது. இவ்வடிவம் நீங்கிப் பழைய வடிவினை எய்தவும், இனி எந்தப் பாவமும் எம்மைத் தாக்காத தடுப் பாற்றலைப் பெற்று வரவும் நாங்கள் இங்கு வந் துள்ளோம்'' என்றனர்.

''அப்படியா? உங்கள் பாவத்தையும் போக்க வல்ல அந்த உயர்ந்த இடந்தான் எது?'' வியப்புடன் வினவினார் முனிவர்.

''இதோ அண்மையில் தென்படும் உத்தரமயூர புரியில் ஓடும் காவிரி ஆறும், அதன் வடகரையில் எழுந்தருளியுள்ள வழிகாட்டும் வள்ளலாராகிய சிவ பெருமானுமே எங்கள் பாவத்தைப் போக்கியருள வல்லவர்கள்.

''கங்கையையும் புனிதமாக்கும் காவிரியின் பெருமையை நான் உணர நீவீர் மூவரும் உரைத் தல் வேண்டும்'' என வேண்டினார் முனிவர்.

தமது வடபுல யாத்திரையை நிறுத்தி விட்டு வழிகாட்டும் வள்ளலாரின் அடித்தலத்தில் அமர்ந்தார் கண்ணுவர். நதியரசிகள் மூவரும் பொன்னியின் பெருமையை விரிவாகக் கூறினர். காவிரியில் மூழ்கி நீராடிய கண்ணுவர் வழிகாட்டும் வள்ளலாரையும் தொழுதார். பன்னிரெண்டே நாட்களில் சிவஞானம் கைவரப் பெற்றார். கங்கையும், யமுனையும், சரஸ்வதியும் பொன்மேனியும் புனிதமும் பெற்றுத் தமதிருப்பிடம் திரும்பினர்.

புண்ணிய நதிகளுக்கும், கண்ணுவர் போன்ற முனிவர்களுக்கும், சிவஞானம் பெற்றிட வழிகாட் டிய, சிவபெருமான் எழுந்தருளிய இத்திருத்தலத்தை 'வள்ளலார் கோயில்' என்றே அழைத்தனர்.

'வள்ளலார்' என்றவுடன் தற்காலத்தில் வட லூர் இராமலிங்கரை நினைவிற் கொள்வர்.

ஆனால், வள்ளலார் என்ற பெயர் சிவபெருமா னுக்கு உரியது என்பதை சிலரே அறிவர். ''இடப்பாகம் கொள்ளும் மாமலையாளுடன் கூட வீற்றிருந்த வள்ளலாரை முன் கண்டனர் வாக்கின் மன்னவ னார்'' என்ற பெரிய புராணப் பாடலால் இதனை உணரலாகும். மயிலாடுதுறையில், சிவபெருமான் வழிகாட்டும் வள்ளலார் என்றழைக்கப்படுகிறார். வடமொழியில் இவரை வதாந்யேஸ்வரர் என்பர். அம்பிகையின் திருநாமம் இங்கு ஞானாம்பிகை என்பதாகும்.

உலகனைத்தையும் தாங்கும் இறைவனையே தாம் தாங்குவதாக எண்ணி ஒருசமயம் செருக்கு கொண்டார் ரிஷபதேவர். அதனை அறிந்த பெருமான் ரிஷபதேவருக்கு மேலான ஞானம் கொடுத்தருளத் திருவுள்ளம் கொண்டார். தனது சடாபாரத்திலிருந்து



சிறு நுனியைக் கிள்ளி ரிஷபதேவரின் மீது இட்டார். அதன் பாரத்தைத் தாங்க முடியாமல் தவித்தார் ரிஷபதேவர். தம்மை மன்னித்தருள வேண்டினார்.

இறைவன் தனக்கே உரிய தனிப்பெருங் கருணையினால் ரிஷப தேவருக்கு ஞானோபதேசம் செய்தருளினான். அத்துடன் தான் குருமூர்த்தமாக (தட்சிணாமூர்த்தியாக) இருக்கும் பொழுதும் தன்னைத் தாங்கும் தனிப்பெரும் நிலையை ரிஷபருக்கு அருளினான்.

அதன்படி, இங்கு, தட்சிணாமூர்த்தி ரிஷப தேவரின் மீது அமர்ந்த நிலையில் காட்சியருளுகிறான். இவரை மேதா தட்சிணாமூர்த்தி என்று போற்றுகின்றனர். தருமையாதீனத்தின் ஆளுகைக்கு உட்பட்ட இத்திருக்கோயிலில் தட்சிணாமூர்த்திக்கென்று தனியே விழா நடை பெறுகிறது. தட்சிணாமூர்த்தி உற்சவ மூர்த்தமும் இங்கு உண்டு.

இந்த மேதா தட்சிணாமூர்த்தியின் மீது தருமையாதீனம் பத்தாவது குருமுகா சன்னிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சிவஞான தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், பத்துப் பாடல்கள் பாடியுள்ளார். அவையே 'தட்சிணாமூர்த்தி திருவருட்பா' என்ற நூலில் அடக்கம்.

கல்வித் தெய்வம் கலைமகளைப் பற்றி இரண்டு நூல்களே தமிழில் உள்ளன. அவை கம்பரின் சரசுவதியந்தாதியும், குமரகுருபரரின் சகலகலாவல்லி மாலையுமே ஆகும். அது போல், திருச்சிராப்பள்ளி தட்சிணாமூர்த்தி மீது, தாயுமானவர் இயற்றிய 'சின்மயானந்த குரு' என்ற தலைப்பிலான பதிகமும், மேதா தட்சிணாமூர்த்தி மீதான இத்திருவருட்பாவும் ஆகிய இரண்டுமே உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

கலைமகளும், கல்லாலின் கீழ் அமர்ந்த கயிலைநாதனும் தாங்களே ஞானத்தின் திருவுரு ஆனவர்கள். அருள் நூல்கள் அனைத்தும் அவர்கள் வடிவமே. ஆதலால்தான் அவர்களைப் பற்றித் தனியே அதிக நூல்கள் இயற்றப்படவில்லை போலும்!

தருமையாதீனத்தின் பத்தாவது குருமகா சன்னிதானமாம் ஞானச் செங்கோலோச்சிய சிவஞான தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் மிகச் சிறந்த சித்தராகவும், அருளாளராகவும், ஞானியாகவும், துறவியாகவும் விளங்கிய மகான் ஆவார்.

அக்காலத்தில் செந்திலாண்டவன் திருக்கோயிலிலிருந்த போத்திமார்கள் இவரது பெருமையை உணராது அலட்சியம் செய்தனர். ''போத்திமார்களே! நீங்கள் நம் சுவாமிகளை எமது சன்னிதிக்குப் பட்டணப் பிரவேசமாக அழைத்து வரவும்'' என்று செந்தி

லாண்டவனே பணித்தான். சுவாமிகளை அலட்சியம் செய்ததால் தமது பேச்சாற்றலை இழந்திருந்த போத்திமார்கள் தாங்களே தீவட்டி பிடித்து அவரைப் பட்டணப் பிரவேசமாக அழைத்து வந்தனர். அவர்களின் பேச்சாற்றல் மீண்டது.

சிவஞான தேசிக சுவாமிகள் தருமையாதீனத்தில் எழுந்தருளியிருந்த பொழுது ஒரு சித்தர் வான் வழியே சென்றுகொண்டிருந்தார். அவரது நிழலைச் சுட்டி, கீழே மண்ணில் வரச் செய்தார். கீழே வந்த அச்சித்தருக்குத் தம் திருக்கரத்தால் திருநீறு அளித்தார். உடனே, அச்சித்தர் வீடுபேறு உற்றார்.

இறந்த தனது தந்தை பேரின்ப வீடு எய்த வேண்டுமென சுவாமிகளிடம் விண்ணப்பிக்க ஒருவன் வந்தான். அவன் கூறுமுன்பே அவன் எண்ணத்தை அறிந்து கொண்ட சுவாமிகள் அவன் தந்தைக்கும் வீடுபேறு அளித்தார்.

ஒரு தொழு நோயாளியைக் குணப்படுத்தியருளினார்.

துங்கன் என்ற மலைநாட்டு மன்னன் மகளைப் பிரம்மராட்சதம் பற்றியிருந்தது. அதனைத் திருநீற்றால் நீக்கியருளினார்.

தமது அனுட்டானங்களில் ஒருவேளை அனுட்டான பலனை அந்த பிரம்மராட்சத்திற்குக் கொடுத்து அதனையும் தெய்வ வடிவம் பெறச் செய்தார். அது முதல் தருமையாதீனத்து குருமூர்த்திகள் தமது ஒருவேளை சந்தியா வந்தனத்தை மிச்சமாகச் செய்து வரும் மரபு ஏற்பட்டுள்ளது.

சேதிமாநகரத்து வேளாளப் பெண் ஒருத்திக்கு ஞானதீட்சை அருளினார். அதனால் அப்பெண் ஔவையார்போல ஞானக்கிழவியாக மாறினாள்.

அத்தகு மகிமைகள் பெற்ற மகானாகிய சுவாமிகள் அருளிய தட்சிணாமூர்த்தி திருவருட்பாவிற்கு விரிவுரை எழுதி வெளியிட்டால் ஆலமரச் செல்வனை அண்டி வழிபடும் அடியவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாகும் எனக் கருதி இதனை எழுதலானேன்.

குருபெயர்ச்சி போன்ற காலங்களில் அனைவரும் இதன் பொருளை உணர்ந்து பாராயணம் செய்ய ஏற்றதாக அமையும் என நம்புகிறேன்.

தட்சிணாமூர்த்தி திருவருட்பாவை வியாழக்கிழமைகளில் திருக்கோயில்களிலோ அல்லது இல்லத்திலோ தொடர்ந்து பாராயணம் செய்தால் நவகோள்களும் நலமே புரிந்திடும் என்பது பலரது அனுபவம். அனைவரும் ஆலமரச் செல்வனின் அருட்பார்வை பெற்று வாழ்க வளமுடன்!

தட்சிணாமூர்த்தி திருவருட்பா

1) தென்முகப் பரமனின் திருவுரு

பூங்கமல வதனமும், பொழிகருணை நயனமும்,
புன்முறுவல் நிலவெறிப்பும்,
பொலிசடாடவியும், அதில் உறை நிலா மதியும், ஒளி
புணை குழை இலங்கு காதும்,
தேங்கு பரமானந்த சின்மயா காயமாம்
சித்தி அருள் முத்திரையும், மேல்
சிவானுபவம் நீங்கினோர் சேர அருள் செபமாலை,
சிவஞான புத்தகமும், ஓர்
வேங்கை அதன் உடையும் சரற்கால மதிகோடி
வெள்ள மென நிறை வடிவமும்,
மேலான தெய்வம் நாம் அன்றி வேறில்லை. இது
மெய்'' என்று எடுத்த கனலும்
ஓங்க வடவாலடியில் உறைகின்ற தெய்வமே!
உனையன்றி வேறு நினையேன்
ஒன்றாகி ஆனந்த உருவாகி என் உயிர்க்கு
உயிரான பரம சிவமே!

இந்தப் பாடலில் சிவஞான தேசிகர் தட்சிணாமூர்த்தியின் திருவுருவ அமைப்பை விளக்குகிறார். இப்பாடல் தியானச்சுலோகம் போல் அமைந்துள்ளது என்று தற்கால தருமையாதீன குருமுதல்வர் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆண் தெய்வங்களை பாதாதி கேசமாக (திருவடி முதல் திருமுடி வரை) வருணிப்பதும், பெண் தெய்வங்களை கேசாதி பாதமாக (திருமுடி முதல் திருவடி வரை) வருணிப்பதும் கவிமரபு. ஆணும் பெண்ணுமாய் விளங்கும் சிவபெருமானை எந்த முறையில் வேண்டுமானாலும் வருணிக்கலாமல்லவா? ஆகவே, ஆதிசங்கரர் கேசாதி பாதம், பாதாதி கேசம் ஆகிய இரண்டு துதிகளும் இயற்றினார் என்பர்.

இங்கு, தட்சிணாமூர்த்திக்குள் அம்பிகை அடக்கம் ஆதலால் கேசாதிபாத வருணனை செய்கிறார்.

தட்சிணாமூர்த்தியின் பூங்கமல வதனத்தை முதலில் காட்டுகிறார். செந்தாமரைப் பூவைப் போன்று திருமுகமண்டலம் திகழ்கிறது. ''கமலப்பூ வதனம்'' என்னாது ''பூங்கமல வதனம்'' என்கிறார். மலரின் மென்மையும், ஒளியும், மணமும் கவர்ச்சியும், மலர்ச்

சியும் கொண்ட திருமுகமாதலால் ''பூங்கமல வதனம்'' என்றார்.

தனக்கு உவமை இல்லாதவனின் திருமுகத்துக்கு எதனை உவமிக்க முடியும்? தாமரையை முகத்துக்கு உவமை கூறும் கவிமரபைக் கருதி ''பூங்கமல வதனம் என்றார்.'' ''ஆயிரம் தாமரை போலும் ஆயிரம் முகமுடையான்'' என்று தேவாரமும் போற்றுகின்றது.

தட்சிணாமூர்த்தி கண்களை மூடிய நிலையில் மௌனத்தில் இருக்கிறார் என்று சிலர் தவறாகக் கருதுவர். ஆனால், அவர் கண்மூடுவதில்லை. கீழ் நோக்கிச் சற்றே திறந்த நிலையில் அவரது கண்கள் விளங்கும். அர்ச்சா மூர்த்தங்கள் எனப்படும் வழிபாட்டுக்குரிய சிலா மூர்த்தங்களிலும் கண்கள் திறந்தே இருக்கும். கண் திறவாமல் மூர்த்தங்களை வழிபாட்டுக்காக நிறுவமாட்டார்கள். ஆகவே, இவரை 'கண் மூடி சாமி' என்று குறிப்பிடுவது தவறு எனத் தெளிதல் வேண்டும்.

இடைவிடாது, எப்போதும் கருணையைப் பொழிந்து கொண்டிருக்கும் அக்கண்களை, ''பொழி கருணை நயனம்'' என்றார்.

''கண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டம்'' என்பார் திருவள்ளுவர். கண்ணுக்கு உண்மையான அழகாவதும் அணிகலன் ஆவதும் அவை பொழியும் கருணைதான்.

அவன் கண்களில் கருணை, முகத்தில் முந்திக் கொண்டு முன் பொழிகிறது. கருணை அழகால் ஈடற்று விளங்கும் அவனை 'அங்கணான்' என்றே திருமுறைகள் போற்றுகின்றன.

அழகிய கண்ணின் கருணையுடன் புன்முறுவல் பூத்த முகத்துடன் வீற்றிருக்கிறான். குளிர்ந்த நிலவொளி போல் அம்முறுவல் உயிர்களை மகிழ்வித்கின்றது. அதனை ''புன்முறுவல் நிலவெறிப்பு'' என்று புகழ்கிறார்.

ஈசனின் முறுவலைக் ''குமிழ்சிரிப்பு'' என்பார் அப்பர் பெருமான்.

பெருமானின் அவ்வழகிய முறுவல் தரிசிக்க வந்தவர்களை வரவேற்று ''அன்பனே! நலமா? எப்போது வந்தாய்?'' எனக் கருணையுடன் வினவுவது போன்ற குறிப்பை உணர்த்துகின்றது. எனவே, ''என்று வந்தாய்? என்னும் எம்பெருமான்தன் திருக்குறிப்பே'' என்றார் அப்பர் பெருமான்.

நான்மறைகளில் ஒரு பாகம் ஈசனின் திருமுடிச் சிறப்பைப் போற்றுகிறது என்று கந்தபுராணத்தில் கச்சியப்பர் உரைக்கிறார். அத்தகு சிறப்புடையது ஈசனின் சடை. அது காடெனப் பரந்து, அடர்ந்து உள்ளதால் 'சடாடவி' என்கிறார் சுவாமிகள். 'குழற்காடு' என்று குமரகுருபரர் அன்னையின் கூந்தலை வருணிக்கிறார்.

அச்சடாடவியில் பிறைமதி அழகாக அமர்ந்து ஒளிவீசுகிறது. மூன்றாம் பிறையின் சிறப்பு அதன் களங்கமற்ற தன்மையே. நான்காம் பிறை முதல் களங்கம் தோன்றுகிறது. களங்கமற்றவர்களை இறைவன் தலையில் தூக்கிவைத்துக் கொண்டாடுவான் என்பதே இதன் உட்கருத்து. மூன்றாம் பிறையை தரிசிப்பது புண்ணியமென்றும் நான்காம் பிறையைக் காண்பதே பாவமென்றும் கூறுவதன் காரணமும் அஃதே.

இறைவனின் திருச்செவியைக் குழை என்னும் காதணி அலங்கரிக்கிறது.

ஆனந்தத்தில் மேலானது பரமானந்தம். அது துன்பம் கலவாதது. இறைவனிடம் அது தேங்கி நிற்கிறது. பேரறிவு அல்லது 'சித்' என்பதனால் விளைவது பரமானந்தம். இறைவன் சின்மயமானவன். அதாவது தூய அறிவே உருவானவன்.

சத், சித், ஆனந்தம் ஆகிய மூன்றும் இறை இயல்புகள்.

சத்தாய் - உண்மையாய் இருத்தல்

சித்தாய் - அறிவாய் இருத்தல்

ஆனந்தமாய் - மகிழ்ச்சியாய் இருத்தல்

இவை மூன்றும் சத்சித் ஆனந்தம் அல்லது 'சச்சிதானந்தம்' எனப்பட்டது. இறைவனின் சோமஸ்கந்த மூர்த்தம் இதனையே உணர்த்துகிறது. ஸ உமா - ஸ்கந்தன் அதாவது உமையோடும் கந்தனோடும் இருக்கும் வடிவம் அஃது. அதில் உமா - சித், மகேசன் - சித், முருகன் ஆனந்தம்.

இவை மூன்றும் தானே என்பதை அதாவது, சத்-சித்-ஆனந்தம் ஆகிய மூன்றும் தானே என்பதை சின்முத்திரையால் விளக்குகிறான். அவன் ஏன், எதற்காக, எவர் பொருட்டு அதனைக் காட்டியருளினான்?

கயிலை மலைச் சாரலில் கல்லால மரத்தின் கீழ் சனகாதி நால்வருக்கும் உபதேசிக்கத் திரு

வுள்ளம் கொண்டு நந்தியம் பெருமானைக் காவலாக வைத்தான். யோக மூர்த்தியாகி உபதேசிக்கும் பொழுது மன்மதன் ஒருவனைத் தவிர அங்கு வேறு எவரையும் அனுமதியாதிருக்கும்படியும் கட்டளையிட்டான்.

ஆலமரத்தின் கீழ் அமர்ந்து, காலொன்றை மடித்து, பிறிதொன்றைக் கீழே தொங்கவிட்ட நிலையில் வலக்கரத்தால் சின்முத்திரை காட்டி உண்மைத் தத்துவத்தை உணர்த்தினான். ''தெற்கே செல்லும் மரணயாத்திரையை விடுத்து சரணயாத்திரையாக வடக்கே வாருங்கள்'' என்று உணர்த்தத்தான் தெற்கு முகமாக அமர்ந்தான். தட்சிண (தெற்கு) திசையை நோக்கி அமர்ந்ததால் தட்சிணாமூர்த்தி என்று அழைக்கப்பட்டான். சின் முத்திரை கண்ட முனிவர்கள் உண்மை ஞானமும் உள்ளத்தெளிவும் பெற்றனர்.

வடமொழி சுலோகமொன்று அவன் உபதேசித்த தனிச்சிறப்பை அழகுபட வருணித்தது. அதாவது, கல்விக் கூடங்களில் மாணவர்கள் வயதில் சிறியவர்களாகவும், ஆசிரியர் மூத்தவராகவும் இருப்பது வழக்கம். (பணியாற்றுவோர் படிக்கும் மாலைக் கல்லூரிகளுக்கு இது பொருந்தாது). இறைவன் நடத்திய பள்ளியோ புதுமையானது. புரட்சிகரமானது.

இளமையழகுடன் இங்கு இறைவன் வீற்றிருக்கிறான். அவனது மாணவர்களாகிய சனகாதி முனிவர்கள் ஆயிரக் கணக்கான ஆண்டுகள் முதிர்ந்த வயோதிகர்கள். ஆசிரியனாகி இறைவன் வாய்திறந்து எதுவும் பேசவில்லை. எனினும், அவனது மௌனத்தின் பயனாகவே மாணவர்களின் ஐயப்பாடுகள் அனைத்தும் நீங்கிவிட்டன.

அப்படி அவன் என்னதான் உணர்த்தினான்? அவன் காட்டிய சின்முத்திரை என்னும் அடையாளம் வலக்கரத்தின் மூன்று விரல்கள் (சுண்டு, மோதிர, நடுவிரல்கள்) உயர்ந்து நிற்கும் நிலையில் காணப்படும். ஆட்காட்டிவிரல், பெருவிரலின் அடியில் இணைந்திருக்கும்.

'சித்' என்றால் அறிவு. உண்மை அறிவை உணர்த்தும் அடையாளம் சின்முத்திரை எனப்பட்டது.

இறைவன் 'பதி' எனப்படுவான். தலைவன் என்பது அதன் பொருள். உயிர்கள் அனைத்தும் பசுக்கள் எனப்படும். பசுக்களாகிய உயிர்களுக்கு இயல்பாகவே மூன்று குற்றங்கள் உண்டு. அவை ஆணவம், கன்மம், மாயை என்பவைதான். அவற்றை மும்மலங்கள் என்பர். அவற்றை விடுத்து பசுக்களாகிய உயிர்கள் இறைவன் அடைதல் வேண்டும். இதுவே என்றும் உள்ள உலக இயக்கத் தத்துவம்.

உயர்த்திய மூன்று விரல்கள் மும்மலங்களாகிய ஆணவம், கன்மம், மாயை ஆகியவற்றைக் குறித்தன. பெருவிரல் பதியாகிய இறைவனையும், ஆட்காட்டி விரல் பதியை அடைய வேண்டிய பசுக்களையும் குறிக்கும்.

பெருவிரலின் உதவியின்றி மற்ற விரல்களால் எழுதவோ, வேறு செயல்களைச் செய்யவோ இயலாது. அது போல் இறைவன் துணையின்றி உயிர்களால் தனித்து இயங்க முடியாது.

இறைத் தன்மையை உணர்த்தும் 'பெருவிரல் குறியே' எழுதத் தெரியாதவர்களின் கையொப்பத்துக்கு மாற்றாக பெற்றுக்கொள்ளும் முறை இங்குச் சிந்திக்கத்தக்கது.

முப்புரி நூல் என்னும் பூணூலும் இச்சின்முத்திரையின் தத்துவத்தையே உணர்த்தும் சின்னமாகும். எட்டுச் சாண் நீளத்துடன், மூன்று புரிகளாக ஒரு முடிச்சுடன் தயாரிக்கப்படுவது பூணூல். எண் சாண் உடம்பில் மும்மலங்கள் உள்ளன. அவை நீங்கும் வரை பிறவி என்னும் முடிச்சு உண்டு என் விளக்குவதே பூணூல்.

இராமாயணத்தில் இராவணன், கும்பகருணன், விபீடணன் என மூவர்.

கந்தபுராணத்தில் சூரன், சிங்கமுகன், தாரகன் என மூவர்.

இலலிதோபாக்யானத்தில் பண்டாசுரன், விஷங்கன், விசுக்கிரன் என மூவர்.

இப்படி, இதிகாச புராணங்களில் அசுர சகோதரர்கள் மூவராகவே காணப்படுவர். சின்முத்திரையின் உயர்த்திய மூன்று விரல்கள் உணர்த்தும் ஆணவம். கன்மம், மாயை ஆகியவற்றைக் குறிக்கவே அவர்கள் மூவராகக் காணப்படுகின்றனர்.

இராவணன், சூரன், பண்டன் ஆகியோர் ஆணவமலத்தின் பிரதிநிதிகள்.

கும்பகருணன், சங்கமுகன், விஷங்கன் ஆகியோர் கன்ம மலத்தின் பிரதிநிதிகள்.

விபீஷணன், தாரகன், விசுக்கிரன் ஆகியோர் மாயாமலத்தின் பிரதிநிதிகள்.

இராமனும், முருகனும், அம்பிகையும் முறையே இக்காவியங்களின் பதிகள்.

அப்பதிகளைச் சரணடைந்த தேவர், முனிவர், மனிதர் ஆகிய அனைவரும் பசுக்கள். இவ்வாறு, இதிகாச புராண வரலாறுகள் அனைத்தும் தட்சிணா மூர்த்தி காட்டும் சின்முத்திரையைச் சுற்றியே இயங்கிய செய்திகள் ஆகும்.

தட்சிணாமூர்த்தியின் வலக்கரம் சின் முத் திரைகாட்டும். இடக்கரம் சுவடி ஏந்தியிருக்கும். மேலே உள்ள வலக்கரத்தில் ஜபமாலையும் இடக்கரத்தில் மழுவும் இருக்கும்.

தொங்கவிட்ட பாதத்தின் கீழ் முயலகன் என்ற அசுரன் இருப்பான். அவன் அஞ்ஞானம் என்னும் அறியாமையின் சின்னமாவான். துர்க்கையின் பாதத் தின் கீழிருக்கும் மகிடனும் அறியாமையின் சின்னமே.

அம்பிகைக்கும் இறைவனுக்கும் மூன்று வகை யான வடிவங்கள் உண்டு.

1) இறைவனும் இறைவியும் தனித்தனி வடிவத் தில் இருத்தல். எடுத்துக்காட்டு :- நடராஜர், சிவகாமி.

2) இருவரும் இணைந்திருத்தல். எடுத்துக்காட்டு :- அர்த்த நாரீசுவரர்.

3) ஒருவருள் ஒருவர் அடங்கியிருத்தல். இவ்வகை யில் காமாட்சி கோலத்தில் இறைவியில் இறை வன் அடக்கம். தட்சிணாமூர்த்தி கோலத்தில் யோகேஸ்வரியாகிய அம்பிகை அடக்கம்.

விணை மீட்டிய கோலத்திலும் தட்சிணா மூர்த்தி காட்சி தருவார். இவரை 'வீணாதர தட்சிணா மூர்த்தி' என்பர். நாரதர் முதலானவர்களுக்கு இசை நுணுக்கங்களை உபதேசித்தவர் வீணாதர தட்சிணா மூர்த்தி. பிறகு தம் வீணையை சகோதரியிடம் அதா வது சரஸ்வதியிடம் அளித்து விட்டார் என்பர்.

''தேங்கு பரமானந்த சின்மயா காயமாம் சித்தியருள் முத்திரை'' என்று சின்முத்திரைச் சிறப்பை சிவஞான தேசிக சுவாமிகள் புகழ்கிறார்.

இறைவனே அட்சர வடிவம். மந்திர வடிவம். அவற்றின் பொருள். இவற்றை உணர்த்த மேல் வலக்கரத்தில் அட்சமாலை என்ற ஜபமாலை தாங்கியுள்ளான்.

''சிவானுபவம் நீங்கினோர் சேர'' என்று சேர்த்துப் பொருள் கொள்ளலாகாது.

''மும்மலம் நீங்கினோர் சிவானுபவம் சேர அருள் ஜெபமாலை'' என்று கொண்டு கூட்டிப் பொருள் கொள்ள வேண்டும்.

அவ்வாறே இடது கீழ்க் கரத்தில் ''சிவ ஞானத்தை அருள வல்லவன்'' என்பதை உணர்த்த புத்தகத்தைத் தாங்கியுள்ளான்.

இடது மேற் கரத்தில் அக்கினி (மழு) ஏந்தி யுள்ளான். ''யாமே உலகில் மேலான கடவுள். யாகம் உங்களுக்கு அருள் செய்வது உறுதி. இதை அக்கினி சாட்சியாக உரைக்கிறேன்'' என்பது போல் மழு வைத் தாங்கியுள்ளான்.

தாருகாவனத்து முனிவர்கள் இயற்றிய தீய வேள்விக் குண்டத்தில் உருவாக்கி விடுத்த வேங்கை புலியின் தோலை இடையில் உடுத்தியிருக்கிறான். அவன் தன் அடியார்களைத் தீய சக்திகளிடமிருந்து காப்பவன் என்பதை உணர்த்துகிறது புலித் தோல்.

இனி, அவனையன்றி ஏன் வேறு தெய்வத்தை நாட வேண்டும்?

''ஒன்றாகி ஆனந்த உருவாகி என் உயிர்க்கு உயிரான பரமசிவமே!'' என்ற பகுதி பத்துப்பாடல் களிலும் பல்லவி போல் அமைந்துள்ளது. இதுவே பதிகத்தின் முத்தாய்ப்புக் கருத்து.

மொத்தத்தில் தென்முகப் பரமனின் திரு வுருவம் குளிர்கால நிலவு (சரற்காலமதி) போல் இனிய குளிர்ச்சியுடன் விளங்குகிறது.

சனகாதி நால்வர் பற்றியும், வட வால மரம் பற்றியும் அடுத்த பாடல் விளக்கத்தில் விரிவாகக் காணலாம்.

(தொடரும்)

★★★

சூளை அருள்மிகு அங்காளபரமேஸ்வரி மற்றும் காசி விஸ்வநாத சுவாமி திருக்கோயில் தல வரலாறு

ஆதிபரம் பொருளின் ஊக்கம் - அதை
அன்னை யெனப் பணிதல் ஆக்கம்
மூலப் பழம் பொருளின் நாட்டம் - இந்த
மூன்று புவியும் உன் ஆட்டம்

அமைவிடம்

சென்னை மாநகரின் இதயப் பகுதியாம் மத்திய இரயில் நிலையம், புரசைவாக்கம், வேப்பேரி ஆகிய பகுதிகளின் அருகில் அமைந்துள்ளது சூளை என்னும் திருத்தலம். இங்கு ஆதி அன்னை அங்காள பரமேஸ்வரியாக அருள் ஆட்சி புரிந்து வருகிறாள். தன் தவவலிமையால் இறைவனின் பாதிப்பகுதியைத் தனதாக்கி கொண்டவள், இறைவனுக்கு ஏற்பட்ட பிரம்மஹத்தி தோசத்தை நீக்குவதற்காக இறைவனின் கையோடு ஒட்டியிருந்த பிரம்ம கபாலத்தைத் தன் சக்தி மற்றும் யுக்தியால் சம்ஹாரம் செய்தவள், மக்களின் குறைகளைக் களைந்து நல்வரங்கள் நல்கி மக்களை பேணிக்காத்து வருகிறாள். இத்திருக்கோயில் சென்னை மாநகரிலுள்ள அங்காளபரமேஸ்வரி ஆலயங்களிலெல்லாம் மிகவும் தொன்மையானதாகும். மற்ற அங்காளபரமேஸ்வரி ஆலயங்களைப்போல் அல்லாமல் இங்கு அம்பாள் பாவாடைராயனை குழந்தையாக, தனது மடியில் வைத்துள்ளாள். மேலும், உக்கிரம் தனிந்த நிலையில் கருணை பொழியும் முகத்தோடு பக்தர்களுக்கு அருள் பாலிக்கிறாள். இத்திருக்கோயில் வளாகத்திலேயே காசி விஸ்வநாதருக்குச் சிவாலயங்களின் அனைத்து அம்சங்களும் அடங்கிய தனி ஆலயமும் உள்ளது.

பூஜை நேரம்

திருக்கோயில் தினசரி காலை 6-00 மணி முதல் 12 மணி வரையும், மாலை 4-30 முதல் 8-30 மணி வரையும் பக்தர்கள் தரிசனத்திற்காக திறந்து வைக்கப்பட்டுள்ளது. அம்பாளுக்கு பிரார்த்தனை அபிஷேகம் 6-00 மணி முதல் 10-30மணி வரை காலையில் மட்டும் செய்யப்பட்டு வரப்படுகிறது. சந்தனக் காப்பு, குங்குமக் காப்பு மாலையில் மட்டும் செய்யப்படுகிறது. அம்பாளின் பிரசாதமாக வலம்புரி சங்கு தீர்த்தம் வழங்கப்படுகிறது.

சிறப்பு விழாக்கள்

மகிஷாசுர சம்ஹாரம்

புரட்டாசி மாதம் நடைபெறும் நவராத்திரி விழாவின் 10ஆம் நாள் விஜயதசமியன்று மகிஷாசுர சம்ஹாரம் சிறப்பான முறையில் நடத்தப்படுகின்றது.

மயானக் கொள்ளை

மாசி மாதம் சிவராத்திரியைத் தொடர்ந்து, வரும் அமாவாசைக்கு முதல் நாள் இரவு 9.00 மணிக்குப் பூங்கப்பறையும், இரவு 12.00 மணிக்குக் கொடிகப்பறையும், அதிகாலை 5-00 மணிக்குப் பஞ்சமுகக் கப்பறையும் திருக்கோயிலிலிருந்து மயானத்திற்கு எடுத்து சென்று பூஜைகள் செய்யப்படுகிறது. அமாவாசையன்று காலையில் அங்காளபரமேஸ்வரி விசுவரூபத்தில் மயானத்திற்குச் சென்று மதியம் உச்சி வேளையில் பிரம்மக் கபாலத்தைச் சம்ஹாரம் செய்து இறைவனுக்கு ஏற்பட்ட பிரம்மகத்தி தோஷத்திலிருந்து விமோசனம் கிடைக்க செய்கிறாள்.

இந்நாளில் பக்தர்கள் தங்கள் பிரார்த்தனையைச் செலுத்துவதற்காக சுண்டல், கொழுக்கட்டை, காய்கனிகள், கிழங்கு வகைகள் அம்மனுக்குப் படைத்து சூறைவிட்டு மயானக்கொள்ளை உற்சவத்தை கொண்டாடுகின்றனர். இது கண்கொள்ளாக் காட்சியாகும். சூளை பகுதியில் உள்ள ஆலயங்களிலிருந்து கபாலத்துடன் அம்மன் வேடமிட்டு, உடுக்கை, பம்பையுடன் இத்திருத்தலத்தின் திருக்குளத்தில் கங்கை திரட்டி செல்கின்றனர். இந்த உற்சவத்திற்குப் பெருந்திரளான பக்தர்கள் தமிழ்நாட்டின் பல பகுதியிலிருந்து வருவதுடன், வெளிமாநிலங்களிலிருந்தும் வந்து கலந்து கொள்கின்றனர்.

பிரம்மோற்சவம்

மாசி மாதம் சுக்கில பட்சம், பஞ்சமி திதியில் அம்மனுக்குக் காப்பு கட்டப்பட்டு, கொடியேற்றத்துடன் 10 நாட்கள் விழா தினமும் இருவேளை திருவீதி புறப்பாட்டுடன் உற்சவம் சிறப்பாக நடைபெறுகிறது. 10ஆம் திருவிழா அன்று இரவு அம்பாள் புஷ்பப் பல்லக்கில் திருவீதிகளில் உலா வருகிறாள்.



சிறப்பு வழிபாடு

வேண்டும் வரங்களைப் பக்தர்களுக்குக் குறைவின்றி உடனுக்குடன் வழங்குவதால், பக்தர்கள் தங்கள் வேண்டுதலைக் காணிக்கையாக செலுத்துகின்றனர். இத்திருத்தலத்தில் அங்கப் பிரதட்சணம், அலகு போடுதல், அக்கினி சட்டி ஏந்துதல், வேப்பஞ் சேலை அணிதல், சித்தாங்கம் அணிதல் மற்றும் முடி காணிக்கை, காது குத்துதல், பொங்கலிடுதல் ஆகியவற்றின் மூலம் தங்கள் பிரார்த்தனையை நிறைவேற்றுகின்றனர். அங்காளபரமேஸ்வரி பல இனத்தவர்களுக்கும் குல தெய்வமாக விளங்குவதால் தங்கள் சுபகாரியத்திற்கு முன்னர் அம்மனுக்கு அபிஷேக, அலங்காரங்கள் செய்து, பொங்கலிட்டு வழிபடுகின்றனர்.

வேண்டுகோள்

மேலும் திருக்கோயில் முன்பக்கம் மூன்று நிலை ராஜகோபுரம், தோரணவாயில். ஈசுவரன் கோயில் கொடிமரம், திருக்குளம், மதில் சுவர் பழுது பார்த்தல் மற்றும் ஈசுவரன் கோயில் பின்பக்கம் மண்டபம் அமைத்தல் ஆகிய திருப்பணிகள் தொடர்ந்து நடைபெற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதற்கு நன்கொடையாளர்களும் வரவேற்கப் படுகின்றனர்.

காணிக்கை அளிக்க, அனுப்ப வேண்டிய முகவரி:

செயல் அலுவலர்

அருள்மிகு அங்காளபரமேஸ்வரி மற்றும்
காசிவிசுவநாதசுவாமி திருக்கோயில்
5, தெற்கு மாட வீதி, சூளை, சென்னை - 600 112.

★★★

ஆலய வழிபாடு

- திருமேனி நாகராசன், காரைக்கால்

முன்னொரு காலத்தில் தேவேந்திரனின் வாகன மாம் வெள்ளையானை தான் செய்த தவறு காரண மாக அவனால் சாபம் பெற்று, இந்நிலவுலகில் புதுச் சேரி மாநிலம் காரைக்கால் மாவட்டம் அம்பகரத் தூர்க்கு வடகிழக்கே 2 கி.மீட்டர் தொலைவில் உள்ள திருக்கொட்டாரம் என்று இன்று திரிந்து வழங்கப்படு கிற திருக்கோட்டாறு என்னும் திருத்தலத்தை வந்து அடைந்தது.

அந்த ஐராவதம் பாவ விமோசனம் பெறு வதற்காக, மூர்த்திக்கெல்லாம் முதல்வனாம், திருக் கோட்டாற்றில் கோயில் கொண்டு அருளும் சிவ பெருமானை வழிபடத் தொடங்கிற்று. அது நாள் தோறும் திருக்குளத்தில் நீராடி வாயில் நீரை உறிஞ்சிக் கொண்டு, துதிக்கையில் மலர்களைப் பறித்துக் கொண்டு திருக்கோயிலினுள் சென்று இறைவனை நீரால் அபிஷேகம் செய்தும், மலர்களால் அர்ச்சித்தும் வழிபட்டு வந்தது. இவ்வாறு பலகாலம் ஐராவதம் சிவனை வழிபட்டுவந்தது.

ஒரு சமயம் வான்மழை பொய்த்ததால் அத் தலத்தில் எல்லா நீர் நிலைகளிலும் தண்ணீரே இல் லாமற் போய்விட்டது. ஊரெங்கும் தண்ணீர் இல் லாததை உணர்ந்த ஐராவதம் இறை வழிபாட்டுக் காகத் தன் கொம்புகளால் மேகத்தைக் குத்திக் கிழித்தது. கிழிக்கவே, மேகத்திலிருந்து மழை பொழிந்தது. மழையில் நீராடித் தன் வாயினில் நீரை உறிஞ்சிக் கொண்டும், துதிக்கையால் வானுலக பாரிஜாத மல ரைப் பறித்துக்கொண்டும் சென்று சிவபெருமானை வழிபட்டு நின்றது.

வெள்ளையானையின் வழிபாட்டைக் கண்டு, கருணை மிகக் கொண்ட சிவபெருமான் அதற் குச் சாபவிமோசனம் அளித்து அருளினார். ஐராவத மும் பெருமானை வணங்கி மீண்டும் தேவேந்திர னது ஊர்தியாய் விண்ணுலகு சென்றது.

இது புராணக்கதையே என்றாலும், இதனுள் பொதிந்து கிடக்கும் உண்மையை நாம் அறிந்து கொள்வது அவசியம் ஆகும். இந்த நிகழ்ச்சியை கி.பி. 7ஆம் நூற்றாண்டில் தமிழகத்தில் வாழ்ந்து இத்தலத்திற்கு வந்தருளிய தமிழ்ஞானசம்பந்தரும் தம் தேவாரத்தில் பதிவு செய்திருக்கிறார்.

சிலர் புராணம் என்றாலே ஏனோ முகம் சுளிக்கின்றனர். ''புராணங்களைப் படித்தும் கேட்டும் அறியாதவர்கள், அறம் பொருள் இன்பங்களின் முடிந்த பயனாகிய வீடு பேற்றை அடைவது என்பது, குருடர் கள் வழிதவறி நடந்து செல்வது போலத் துன்பத்தை மிக விளைவிக்கும்'' என்கிறார் திரிகூடராசப்பக் கவிராயர்

''....... வளர்புராணம்
கேளாதார் கதிவிழைவும் விழியில்லார்
வழிநடக்கும் கிரமம் ஆமால்''

ஐராவதம் பாவமீட்பு நிகழ்ச்சியால், நாம் அறியும் உண்மை என்னவென்றால், ஆலயம் சென்று ஆண்டவனை வழிபட்டால் அல்லல் தீரும் என்பது தான். ஐந்தறிவு படைத்த விலங்கே இறைவனை வழிபட்டு வாழ்வு பெறுமாயின் ஆறறிவு படைத்த நாம் வழிபட்டால் வாழ்வு பெறாமல் இருப்போமா? யானை என்ன? சின்னஞ்சிறிய எறும்புகூட இறை வனை வழிபட்டு வாழ்வு பெற்றிருக்கின்றது என் பது வரலாறு. இந்த அதிசயம் நடைபெற்ற ஊர் தான், திருச்சிராப்பள்ளிக்கு அண்மையில் உள்ள திருவெறும்பூர்.

எனவே, உயர் பிறப்பாம் மனித பிறப்பெடுத்த நாம் ஆலய வழிபாடு செய்வது என்பது அவசியம் என்று ஆன்றோர்கள் பெரிதும் வலியுறுத்தியுள்ளார் கள். ''ஆலயம் தொழுவது சாலவும் நன்று'' எனவும், ''கோபுர தரிசனம் கோடி புண்ணியம்'' எனவும், ''கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டா'' எனவும், ''ஆலயம் தானும் அரனெனத் தொழுமே'' எனவும் பலவாறு ஆலய வழிபாடு வற்புறுத்தப் பட்டுள்ளது.

இறைவனை வணங்கத்தான் நமக்குத் தலை என்றும், அவனைத் தரிசிக்கத்தான் நமக்குக் கண்கள் என்றும், அவனைக் கும்பிடத்தான் நமக்குக் கரங்கள் என்றும், அவனைப் புகழத்தான் நமக்கு வாய் என் றும் அருளாளர்கள் நமக்கு வாழ்ந்து வழிகாட்டி யிருக்கிறார்கள்.

ஆழ்வார்களும், நாயன்மார்களும், அருணகிரி நாதரும் குமரகுருபரரும், தாயுமானவரும், பட்டினத் தடிகளும் போன்ற எண்ணற்ற இறைஞானியர் திருத் தலங்கள் தோறும் சென்று திருக்கோயிலில் குடி கொண்டு அருளும் இறைவனை வழிபட்டு வாழ்வு பெற்றிருக்கின்றார்கள் என்பதும் வரலாறு.

அப்பரும் சுந்தரரும் ஆளுடைப்பிள்ளை யாரும் பாடி வழிபட்ட திருக்கோயில்கள் 274. மணிவாசகர் வழிபட்ட திருக்கோயில் 25. அருணகிரி நாதர் திருப்புகழ்பாடி வழிபட்ட திருக்கோயில்கள் 100.

நம்மாழ்வார், பொய்கையாழ்வார், பூதத்தாழ் வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார், பெரியாழ் வார், ஆண்டாள், குலசேகராழ்வார், தொண்டரடிப் பொடியாழ்வார், திருப்பாணாழ்வார், மதுரகவி யாழ்வார், திருமங்கையாழ்வார் ஆகிய பன்னிரு ஆழ்வார்களும் பாடி வழிபட்ட திருப்பதிகள் 108 ஆகும்.

இவ்வாறு ஆலய வழிபாட்டின் அருமை பெருமைகளை அருளாளர்கள் நமக்கு அழுத்தமாக உணர்த்தி, நாம் பிறவிப் பயனைப் பெற்றுய்யுமாறு வழிகாட்டியிருக்கின்றார்கள் என்பதை மனதில் பதிய வைக்க வேண்டும்.

கலைமகள் திருவருள்

- திருமதி ஜி. கமலா, எம்.ஏ

இருவினையும் முக்குணமும் கரணம் நான்கும்
இடர்செயுமைம் புலனும்கா மாதி யாறும்
வரவரவும் ஏழைக்கோர் எட்ட தான
மமத்தொடும்வந் தெதிர்த்தநவ வடிவ மன்றே.

- மகரிஷி தாயுமான சுவாமிகள்

இறைவன் சமயங்கள் கடந்த - சமயாதீதப் பரம்பொருள். நல்வினை - தீவினை என்னும் இரு வினைகட்கு அப்பாற்பட்டவன். குணாதீதன். அந்தக் கரணங்கள் அடங்க வெளிப்படுவன்; புலன்களுக்குப் புலப்படாதவன். காம குரோதாதிகள் கடந்து நிற்ப வன். அருள் வடிவு ஏழு மூர்த்தமுடையவன். எட்டு இறை இலக்கணங்கட்கு உட்பட்ட என் குணத்தன். எனவே வான்புகழ் வள்ளுவர்.

'கோளில் பொறியில் குணம்இலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை'

எனும் பாடலில் இறைவனை எண்குணத்தான் எனப் போற்றுகிறார். இப்பரம்பொருள் தன் ஆற்றலை ஒன் பது சக்திகளாக வெளிப்படுத்துகிறார். இந்த ஒன்பது சக்திகளை, ஒன்பது வடிவங்களாக 'நவராத்திரி விழா' தொடுத்து பிரதி புரட்டாசி திங்களில் அமாவாசை தொடங்கி வழிபடுகிறோம். ஒன்பது நாட்களில் செய் யும் முழுமையான வழிப்பாட்டில், ஒன்பாவது நாளாக, 'கலைமகளை' வழிபடுகிறோம். கலைமகள் ஒன்பது நாள் முடிவில் பூரண சந்திர பொலிவுடன் முழுமையான ஆற்றலாகத் தோன்றுவாள்.

கலைமகள் விழா தனித்துக் கொண்டாடு வது ஏன்? கலைமகள் ஆன்மாவுடன் எவ்வாறு அக வுலகிலும் புறவுலகிலும் தொடர்பு கொண்டிருக் கிறாள்? தத்துவ முறையிலே இவளது பணி என்ன?

புராணங்களில் கலைமகளை, பிரம்மாவின் மனைவி என்பர். வேதங்களிலிருந்து ஞானம் பெற கலைமகள் அருள்வேண்டும். வேதம் ஓத எழுவாயாய் நின்று ஆற்றலை எழுப்புவள் ஆதலால் இவளை 'வேதவல்லி' என்பர்.

மகரிஷி தாயுமான சுவாமிகளும் தம் பாடலில்,

பட்ட வர்த்தனர் பராவு சக்கரதர
பாக்கியமான சுபயோகமும்
பார காவிய கவித்வம் நான்மறை
பாராய ணம்செய்மதி யூகமும்

தருபவள் என்கிறாள். வேதா - ஞானமூலம் - ஞானத்தி னிடம் நின்று ஆற்றலை வெளிப்படுத்துபவள். எனவே கல்வி அமைப்பு இவள் ஆற்றல் இல்லாமல் அமை யாது.

மேலும் ஆன்மாக்களாகிய நமக்குத் தடை யுண்டு. இத்தடையை நீக்கி ஆன்மாவை உய்வு பெற இறைவன் வெளிப்படுத்தும் ஒன்பது ஆற்றல்களுள் முதல் பணியை செய்பவள் கலைமகள். 'கலை' எனும் ஆற்றலானவள் இறையருளினாலே, கருணையாலே, வேண்டுதல் காரணமாக விருப்பத்தின் காரணமாக ஆன்மாவின் உள்ளுள்ள தடையை முற்றாக நீக்க முதன் முதலாக கருவுள்ளே செல்கிறாள்: ஆன்மாவின் செயல் புரியும் ஆற்றலை எழுப்புகிறாள். 'நீ அறிவுடைய வன்: இயங்கவேண்டியவன்: இம்முறையில் தான் இயங்கவேண்டும்' என்ற இச்சையை ஆன்மாவுக் குத் தருகிறாள். ஆரம்ப நிலையில் கருவிலுள்ள ஆன்மாவை எழுப்புவள் கலை. 'கலை' ஆற்றலால் ஆன்மா சிறிதேனும் எழுப்பப்பட்டால் தான் மற்ற எட்டு சக்திகள் துணை செய்யும். இவ்வாற்றல்கள் கலைமகள் இல்லாமல் ஆன்மாவுள் புகமுடியாது.

கருவிலிருந்து குழந்தை வெளிவரும் போது, குழந்தையைச் சுற்றியுள்ள மெல்லிய தோல் கிழியும். அத்தருணம் வெளிப்புறக் காற்று குழந்தை மேனி யில் படும். காற்று பட்டவுடன் குழந்தைக்கு ஓர் உணர்வு வரும். அத்தருணம் இக்கலை உட்சென்று ஆன்மாவை, 'உனக்கு ஞானம், செயல், இச்சை - இம்மூன்று ஆற்றல்களும் உண்டு என்று முதன் முத லாக உணர்த்தி எழுப்புகிறாள். காரிட்ட ஆணவக் கருவறையில் கண்ணிலாக் குழவி (குழந்தை) கட் டுண்டு இருந்தபொழுது, தன்னை, 'தான்' என்பதாக எழுப்பினாலும் எழுமுடியாத நிலையில் தடையின்றி

கருவுட்சென்று ஆன்மாவை யெழுப்பி முதன்முதலாக ஆன்மாவுடன் தொடர்பு கொள்பவள் கலை. 'கலை' ஆன்மாவை தொட்ட மாத்திரமே சிசு சிலிர்த்து விடுகிறது. இவளது உண்மையான ஆற்றல் குழந்தை ஆரம்ப நிலையில் ஒரு கால் தூக்கி மேல் நடக்கச் செய்யும் முயற்சி போல ஆன்மாவிற்குப் படிப்படியான ஞானம் பெற உதவுவது. எனவே இவளை 'வித்யா' என்பர்.

மற்றும் மனதைக் கலைத்தலுக்கும் 'கலை' எனும் சொல் பொருள்படும். ஒருமுகப்பட்ட மனதை கலைக்கச்செய்து பரந்த ஞானமாவது 'வித்தியாம்சமாக' வெளிப்படுவது. எனவே இவளை 'வித்தியாசினி' என்பர். ஆனால் கல்லைப்போன்று ஒரே நிலையில் நிற்கவைக்கும் ஆற்றல் உள்ள பொருளுக்கும் கலை என்ற பெயருண்டு. 'கலை' என்பவள் முதன் முதலாக ஆன்மாவைத் தாங்கி நின்று ஆணவ மலம் கிழித்துக் கொண்டு அறிவில் காணரிய மெய்ஞ் ஞானத்தை நிலைநாட்டுவதால் உண்டாகும் ஆனந்தத் திறகு மூலமான ஆற்றலை எழுப்புகின்ற காரணத்தால் முதற்படியாக நிற்கிறாள்.

மற்றும் 'சக்தி சக்கரத்திலுள்ள' ஒன்பது கோணங்களில் மேலுள்ள இறைவியை 'கலைமகள்' எனலாம். இவ்வொன்பது கோணங்களில் சக்தி கோணம் நான்கு. சிவகோணம் ஐந்து. இக்கோணங்களை ஒளிர்கோணங்கள் என்பர். சக்தியின் ஆற்றல் சிவத்தில் ஆற்றல் இரண்டையும் அனுபவிக்க ஆன்மாவிற்கு துணை நிற்பது 'கலை'. ஒன்பது கோணங்கள் இணைகின்ற காலத்தில் இணைக்கின்ற 'புள்ளி' ஒன்று நடுவே வரும். அப்புள்ளியாக நிற்பவள் 'கலைமகள்'. அப்புள்ளியின் அடிப்படையில் ஒன்பது கோணங்களில், சக்தி கோணங்கள் நான்காகவும், சிவ கோணங்கள் ஐந்தாகவும் விரியும். இதனை 'ஸ்ரீ வித்யா கோணம்' என்பர். இவ்விரண்டையும் இசைக்கின்ற இடத்தில் கலைமகள் நிற்பாள்.

மேலும் கலைமகளின் ஆற்றல் ஞானத்தின் இருப்பிடமாகவும் விளங்குகின்றது. ஞானத்தில் 'நான்' எனும் சீவனைக் கண்டு 'நான்' தனிப்பொருள் என்றுணரும்போது ஆனந்தம் வரும். அவ்வானந்தம் பெற - அடையக்கூடிய புள்ளி இதுதான் என்று முதன் முதலாக அறிவிப்பவள் கலைமகள். அடையக்கூடிய ஞான ஆற்றலை இச்சையை எழுப்பி செயற்பட செய்பவளும் கலைமகளே. இவள் 'நாடி' என்ற சக்தியாக நின்று அருளுவாள். இவள் ஒன்பது நாள் செய்யும் முழுமையான வழிபாட்டில், ஒன்பதாவது நாள் முடிவில் பூரண சந்திர பொலிவுடன் முழுமையான ஆற்றலாக தோன்றுவாள். இதனைத் திருமூலர்.

> தாரகை யாகச் சமைந்தது சக்கரந்
> தாரகை மேலோர் தழைத்தது பேரொளி
> தாரகை சந்திரன் நற்பகலோன் வரத்
> தாரகை தாரகை தாரகை கண்டதே
>
> (திருமந்திரம் 1272)

எனும் பாடலில் தாரகை சமைந்த சக்கரத்தின் மேல் தழைத்த பேரொளி, 'சந்திரன் - சூரியன் பவனி வருவதுபோல், ஒளிர்தலை ஒத்தது என்கிறார். இப்பேரொளியில் நின்று ஒளிர்பவளே கலைமகள்.

கலைமகள் ஆன்மாவை யோகநிலையில் தலை சிறந்ததாக ஆக்குவாள். ஆன்மாவைப் பரம் பொருளுடன் நெருங்கச் செய்து சாரூபம் பெறச் செய்பவள். சாரூபமாவது எந்த ஆற்றலை வடிவுடன் தியானித்து யோகமுறுகிறார்களோ அவ்வடிவாகவே மாறுவது. இந்நிலையில் தெய்வ சக்தியாக உருப் பெறுவர்.

இறுதியாக, புள்ளியாக நின்று அனைத்து ஆற்றல்களையும் உடன் நின்று துணை நிற்கச் செய்யும் இவ்வாற்றல் ஒன்பது சக்திகளாகவும் விரிகிறது. ஒன்பதாவது இரவு வழிபாட்டில் முழு ஆற்றலாக வெளிப்படுகிறாள். எனவே கலைமகளை, 'கலைமகள் விழா' அல்லது 'சரஸ்வதி பூசை' யாக அவளது முழுவாற்றல் பெற வழிபடுகிறோம். கலைமகளுக்கு இச்சா, கிரியாஞானம் ஆகிய மூன்று சொருபங்களும் இணைந்து செயல்படுத்தும் ஆற்றல் உண்டு. ஆதலால் கலைமகள் வழிபாட்டில் கலைமகளை பூசித்தால் மூன்று சக்திகளின் ஆற்றல் ஒருங்கே பெரும் பேறு கிடைக்கும். பூரணமான அருள் கிட்டினால் மற்ற ஆற்றல்களும் இணைந்து செயல்படும் என்பது வெள்ளிடைமலை.

★★★

பாலுக்குள் நெய்யாய் இருக்கும் பரம்பொருள்

- பி. தங்கநாதன் DRS DFT

சிறந்த உண்மைப் பொருளாக
விளங்குவான்! அவன் இறைவன்!

துறந்த மெய்ஞானிகள் தூய நெஞ்சில்
தூங்குவான்! அவன் இறைவன்!

பரந்த இந்த பார்படைத்தும்
படைப்பிலான்! அவன் இறைவன்!

மறந்தும் இன்ப துன்பங்கள்
தானறியான்! அவ்ன இறைவன்!

மேகங்கள்மோதும் போதில் மின்னலாய்
சிரிப்பான்! அவன் இறைவன்!

வேகமாய் புயல் வரும்போது விரட்டி
அடிப்பான்! அவன் இறைவன்!

தாகம் எடுக்கும்போது தண்ணீராய்
வருவான்! அவன் இறைவன்!

சோகத்தில் மூழ்கும்போது உயிர்
காப்பான்! அவன் இறைவன்!

இல்லை என்று சொல்லத்தான்
எண்ணமிலான்! அவன் இறைவன்!

தொல்லையெலாம் போக்கிவிடும்
தூய மனத்தான்! அவன் இறைவன்!

கல்லையும் கனி ஆக்கும்
கனிவுடையான்! அவன் இறைவன்!

முல்லை போல் மணந்து நிற்கும்
மூலவன்! அவன் இறைவன்!

பஞ்ச பூதங்களைப் படைப்பாக்கிக்
கொண்டான்! அவன் இறைவன்!

வஞ்சமிலா நெஞ்சங்களை என்றும்
வாழ்விப்பான்! அவன் இறைவன்!

நஞ்சுமனங்களை யெல்லாம் நசுக்கி
வைப்பான்! அவன் இறைவன்!

அஞ்ஞானத்தை அழிக்கத்தான் அடி எடுத்து
வருவான்! அவன் இறைவன்!

மின்சக்தி போலத்தான் மறைந்து
இருப்பான்! அவன் இறைவன்!

அனலிருக்கும் விறகாக அவனியில்
ஒளிந்திருப்பான்! அவன் இறைவன்!

இனிக்கும் பாலுக்குள் நெய்யாய்
இருப்பான்! அவன் இறைவன்!

கண்ணுக்கே எட்டாமல் காரியம்
முடிப்பான்! அவன் இறைவன்!

அன்னையாய் இருந்து அமுதூட்டி
மகிழ்வான்! அவன் இறைவன்!

தன்னையே தந்தையாக்கி எல்லாம்
தந்திடுவான்! அவன் இறைவன்!

பொன்னையே விரும்பும் உலகில்
பொன்னாவான்! அவன் இறைவன்!

அன்றலரும் மலர் போலத்தான்
மணமாவான்! அவன் இறைவன்!

விண்ணில் இருந்து மாமழையை
விடுவிப்பான்! அவன் இறைவன்!

மண்ணில் விதை போட்டால் முளைக்க
வைப்பான்! அவன் இறைவன்!

கண்ணிமைபோல் நானிலத்தை
காப்பான்! அவன் இறைவன்!

மண்ணுக்கும் விண்ணுக்கும் விருந்து
அளிப்பான் அவன் இறைவன்!

ஏறாத மலை எல்லாம் ஏறி
நிற்பான்! அவன் இறைவன்!

ஊறாத ஊற்றாக உறைந்து
இருப்பான்! அவன் இறைவன்!

கூறாத மொழிகளிலே குடி
கொள்வான்! அவன் இறைவன்!

பாராத ஒரு முகத்தில் என்றும்
பரிமளிப்பான் அவன் இறைவன்!

பொன் அள்ளிக் கொடுத்தாலும்
ஏற்றிடான்! அவன் இறைவன்!

அன்னம் அள்ளி கொடுத்தாலும்
உண்டிடான்! அவன் இறைவன்!

***

வாசகர் எண்ணங்கள்

''திருக்கோயில்'' இதழ்களைப் படிக்கும் வாய்ப்பு கிடைத்தது. மிகவும் அழகிய அரிய, சொல், பொருட் செறிந்த கட்டுரைகளை வெளியிட்டு வருகிறீர்கள். சைவ, வைணவ ஒற்றுமையைக் காட்டும் விதத்தில், எல்லா கட்டுரைகளும் வெளியிட்டு வருகிறீர்கள். திருவாசகக் கருத்தரங்கில் ஆணையாளர் திருமிகு ச. சாவர்க்கர் நிகழ்த்திய உரை அருமையிலும் அருமை.

- இந்திரா ஆரா அமுதன்
6, ஸ்ரீரங்கம் அபார்ட்மென்ட்ஸ,
16, காந்தி ரோடு, ஸ்ரீரங்கம் - 620 006.

ஆணையாளர் திருமிகு ச. சாவர்க்கர் அவர்கள் அப்பைய தீட்சதர் வரலாற்றையும் அவருடைய ஆழ்ந்த இறையுள்ளத்தையும், அவருடைய ''உன்மத்த பஞ்சாசத்'' நூலின் சிறப்பையும் எடுத்துக்காட்டி ஆற்றிய ''சிவபுராண உரை'' பயன் மிகு உரை என்பதில் ஐயமில்லை.

- அ. நிறைமதி,
சென்னை - 15

சிவபுராணத்தில் வரும்

''புல்லாகிப்பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய்'' என்ற தொடர்களுக்கு விளக்கம்

கூற முற்பட்ட ஆணையாளர் அவர்கள் புல்லின் பெருமையையும், கல்லுக்குள் தேரையாய்ப் பிறக்கும் பிறவி பற்றியும் விளக்கிய உரை அருமை.

- பைம்பொழில் கே. பாலசுப்பிரமணியம்,
திருநெல்வேலி.

இந்துசமய அறநிலையத் துறை ஆற்றிய அரும் பணிகளைத் தொகுத்து ''திருக்கோயில்'' இதழில் வெளியிட்டிருந்தீர்கள்.

பயனுள்ள காரியம். அறநிலையத் துறையின் பணிகள் மென்மேலும் சிறக்க நல் வாழ்த்துக்கள்.

அ. சுரேஷ்குமார்,
பவானி.

பொன்னான பணிகள் செய்தால்
போற்றிடுவான் அவன் இறைவன்!

பொன்னான நெஞ்சம் என்றால்
போதுமென்பான் அவன் இறைவன்!

இல்லறத்தில் நல்லறத்தை என்றும்
ஏற்றிடுவான் அவன் இறைவன்!

பொல்லாத துறவறத்தை துளியும்
போற்றிடான் அவன் இறைவன்!

எல்லா வினைகளையும் இனிதே
முடிப்பான்! அவன் இறைவன்!

சொல்லெடுத்து பாடி நின்றால்
சுவைத்திடுவான்! அவன் இறைவன்!

எந்த நிறம் என்று சொல்லத்தான்
நிறமில்லான்! அவன் இறைவன்!

எந்த இனம் என்று சொல்லத்தான்
இனமில்லான்! அவன் இறைவன்!

எந்த ரூபம் என்று சொல்லத்தான்
ரூபமில்லான்! அவன் இறைவன்!

எந்த ஊர் என்று சொல்லத்தான்
ஊரில்லான்! அவன் இறைவன்!

வானத்தில் ஒளியாய் நின்று
சுடராவான் அவன் இறைவன்!

கானத்தில் கவிக்குள் நின்று
இசையாவான் அவன் இறைவன்!

தானத்தில் பொருளாய் நின்று
அருளுவான் அவன் இறைவன்!

மோனத்தில் சிறந்து என்றும்
மிளிர்வான் அவன் இறைவன்!

★★★



திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்தசாரதி திருக்கோயிலில் பேறறிஞர் அண்ணா நினைவுநாள் சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து விழா மிகச் சிறப்புற நடைபெற்றது. இவ்விழாவில் மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். சென்னை இணை ஆணையாளர் திருமிகு இரா. சுப்பிரமணியன், பி.ஏ., பி.எல்., உதவி ஆணையாளர் திருமிகு ஆ. சுப்பிரமணியம், எம்.ஏ., பிஎல்., திருக்கோயில் உதவி ஆணையாளர்—செயல் அலுவலர் திருமிகு ஆ. குப்புசாமி, பி.ஏ., பிஎல்., ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

பதிவு எண். T.N/CHIEF PMG/515/WPP 283

மயிலை அருள்மிகு காரணீசுவரர் திருக்கோயில் இராஜகோபுரத் திருப்பணி துவக்க விழாவில் மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் எம்.ஏ., பிஎச்.டி., அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித் தார்கள். மயிலை சட்டமன்ற உறுப்பினர் திருமிகு ந.பூ. இராமஜெயம், இணை ஆணையாளர் திருமிகு இரா. சுப்பிரமணியன், பி.ஏ., பி.எல்., உதவி ஆணையாளர் திருமிகு ஆ. சுப்பிரமணியம், எம்.ஏ., பிஎல்., ஆகியோரும் அறங்காவலர் பெருமக்களும் இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை - 600 034.
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், எம்.ஏ.பி.எச்.டி.,
அச்சிட்டோர் : ***பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்.,*** 142, ஜானி ஜான் கான் தெரு, சென்னை - 600 014.